Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, JULY 6, 2022

புதன்கிழமை ஜூலை 06, 2022 | ஒளி: 08 கதிர்: 041 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும்
# தார்மீக உரிமை இல்லை

ஜனாதிபதியும் அரசாங்கமும் தற்போதைய நெருக்கடிக்கு பொறுப்பேற்று பதவியில் இருந்து விலகுமாறு, இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார், ஆட்சியில் நீடிக்க இவர்களுக்கு தார்மீக உரிமை இல்லை எனவும் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக, இலங்கையின் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் நான் அன்புடன் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவர்கள் இனி பதவியில் நீடிப்பதற்கு தார்மீக உரிமை இல்லாததால், பொறுப்பை ஏற்று தங்கள் பதவிகளில் இருந்து விலக வேண்டும்.

தொடர்ச்சி P2

# 'காஸ்' கப்பல் தாமதமாகும்



இன்று தொடக்கம் 8ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்ட 3,724 மெற்றிக் தொன் எல்.பி எரிவாயுவை ஏற்றிவரும் கப்பல் மேலும் தாமதமாகும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. வானிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், திரவ பெற்றோலியம் எரிவாயு விநியோகம், அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தொடர்ந்து இடம்பெறும் என்றும், ஜூலை 7 ஆம் திகதி வரை எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படாது எனவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்திருந்தது.

ஜூலை மாதத்துக்குள் 33,000 மெற்றிக் தொன் எரிவாயு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜூலை 6 ஆம் திகதி குறித்த கப்பல் நாட்டை வந்தடையும் என்றும் நிறுவனம் இதற்கு முன்னர் குறிப்பிட்டிருந்த நிலையில் தற்போது கப்பல் வருவதால் தாமதம் ஏற்படும் என்பதை அறிவித்துள்ளனர்.

# மீண்டுமொரு கறுப்பு ஜூலையா?



அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டங்களை திசை திருப்பும் வகையில் கறுப்பு ஜூலை போன்ற வன்முறைகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டங்களை தீட்டுவதாக, சந்தேகங்கள் எழுந்துள்ளதாக ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ரணிலை பூச்சியமாக்கினோம்

பா.நிரோஸ்



கடந்த பொதுத் தேர்தலில் ரணிலுக்கு கற்பிக்க வேண்டிய முறையான பாடத்தை கற்பித்து, அவரை தனியாக தேசிய பட்டியலில் அமரவைத்தோம்; ரணிலை பூச்சியமாக்கினோம். அதேபோல் சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் படிப்பினையை வெகு விரைவில் பிரதமருக்கு கற்பிப்போம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


## இராணுவ அதிகாரியிடம் விசாரணைக்கு
# ஐவரடங்கிய நீதிமன்றம்

குருநாகல், யக்கபிட்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி சிவிலியன் ஒருவரைத் காலால் உதைத்துத் தாக்கியமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு, இராணுவ தளபதியின் பணிப்புரையின் கீழ், மேற்கு பாதுகாப்பு படைத் தலைமையகம் ஐந்து பேர் கொண்ட விசாரணை நீதிமன்றத்தை நியமிக்க பணிக்கப்பட்டுள்ளது.

**"சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரியை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் அனைத்துப் பணிகளில் இருந்தும் விடுவித்துள்ளதுடன் இராணுவப் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவுசெய்து வருகின்றனர்**

அத்துடன் விசாரணை நீதிமன்றத்தின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை,

தொடர்ச்சி P2



## ஐ.எம்.எப்புடன்
# வங்குரோத்தாக பேசுகின்றோம்

**28 பில்லியன் அ.டொலர் கடனை 2027இல் செலுத்தவேண்டும்**

**அரசாங்கத்தின் மொத்தக் கடன் சுமை 21.6 டிரில்லியன் ரூபாய்**

பா.நிரோஸ்

நிதி ஆலோசகர்கள் கடன் மறுசீரமைப்பைச் செய்த பின்னர், ஓகஸ்ட் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்டத்திலான ஒப்பந்தத்தை செய்துகொள்ள எதிர்பார்க்கிறோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். எனினும் நாங்கள் இப்போது வங்குரோத்து நாடாக பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறோம்.

தொடர்ச்சி P2

### இராஜினாமா செய்யவும் தயார்

பா.நிரோஸ்

ஆறு மாதங்களுக்குள் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தக்கூடிய சிறந்த பொருளாதார மீட்புத் திட்டம் அநுரவிடம் இருப்பின், அதனை ஜனாதிபதியிடம் அல்லது பாராளுமன்றத்தில் முன்வையுங்கள், சிறந்த திட்டமாக இருந்தால் அதனையே நடைமுறைப்படுத்துவோம்.

தொடர்ச்சி P2

# நான் குற்றவாளி அல்ல



பா.நிரோஸ்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் நான் குற்றவாளி என்பதை எங்கேயும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும், அது தொடர்பான குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# தாக்குதலுடன் அரசாங்கம் தொடர்பில்லை

மஹேஸ்வரி விஜயனந்தன்

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களின் மீதான இராணுவம் மற்றும் பொலிஸாரின் தாக்குதலின் பின்னணியில் அரசாங்கம் எந்த விதத்திலும் தொடர்புபடவில்லை எனத் தெரிவித்த அமைச்சரும், இணைப் பேச்சாளருமான மஹிந்த அமரவீர, பொதுமக்களினதும் பொதுச் சொத்துகளினதும் பாதுகாப்புக்காக மாத்திரமே இராணுவத்தினரும் பொலிஸாரும் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (5) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## சபைக்குள் நுழைந்த 'கோட்டா கோ கம'
# சபையை விட்டு இடையிலேயே வெளியேறினார் ஜனாதிபதி

பா.நிரோஸ்

சபை அமர்வுகளை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வந்திருந்தபோது, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் பாராளுமன்றம் 10 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டதோடு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சபையிலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

# கண்டிக்காது மத்திய அரசு வேடிக்கையே பார்க்கிறது



ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது தொடர்பாக, கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் ( ம.தி.மு.க) பொதுச் செயலாளர் வைகோ,

தொடர்ச்சி P2

# கஸினோ தொழில் சட்டத்தில் திருத்தம்

சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்), பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் மூலம் இலங்கையில் சீட்டாட்டத் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் சீட்டாட்டத் தொழிலை மேற்கொண்டு செல்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட வேண்டியிருப்பினும்,

தொடர்ச்சி P2



# விவசாயக் கடன் தள்ளுபடி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பின்னர் ஏற்பட்ட கொவிட் - 19 பெருந்தொற்று நிலைகளால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மேலும் மோசமடைந்து வருவதுடன், பொதுவாக அனைத்து துறைகள் மீதும் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளன.

தொடர்ச்சி P2

## ஓய்வூதியத்தின் உண்மையான மதிப்பும்
# 50% குறைந்துள்ளது

பா.நிரோஸ்

ரூபாயின் மதிப்பு சரிவால், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றில் உள்ள பணத்தின் மதிப்பு 50% குறைந்துள்ளதுடன், ஓய்வூதியத்தின் உண்மையான மதிப்பும் 50% குறைந்துள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (5) விசேட உரை நிகழ்த்திய போதே அவர் இதனை கூறினார்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதே எங்கள் திட்டம்.

தொடர்ச்சி P2

# உலக உணவு திட்டத்தின் பிரதானி அடுத்த வாரம் இலங்கை வருகின்றார்

பா.நிரோஸ்

உலக உணவுத் திட்டம் மற்றும் உலக உணவு வேளாண்மை அமைப்பு ஒன்றிணைந்து இலங்கையின் உணவு நெருக்கடி நிலைமைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

தொடர்ச்சி P2

# 14 ஆவது மரணம் 'வரிசை'யில் பதிவு



எரிபொருள், சமையல் எரிவாயு வரிசைகளில் நின்றுகொண்டிருந்த போது மரணமடைபவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. பொரளையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வரிசையில் நின்றிருந்த போது, 60 வயதானவர் நேற்று (05) மரணமடைந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# தார்மீக உரிமை இல்லை

இச் சூழ்நிலையில் மக்களுக்கு மேலும் துன்பத்தை ஏற்படுத்தாமல் அதிகாரத்தை மீண்டும் மக்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பதவி விலகினால் அனைவருக்கும் நம்பகமான மற்றும் வெளிப்படையான சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை மக்கள் நிறுவ முடியும். இத்தகைய குறுகிய கால அரசாங்கம் நிபுணர்களின் அறிவுறுத்தல்களுடன் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டின் நிலைமை மேம்பட்டவுடன், கூடிய விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவது அவசியம் என கர்தினால் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ரணிலை...

திறமையற்ற பிரதமர் என்பதை ரணில் உலகிற்கு காண்பித்து விட்டார். ரணிலுக்கு நான் பாடம் எடுப்பேன். திறமையானவர்கள் திறமையற்றவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு காண்பிக்க வேண்டும் எனவும் சஜித் தெரிவித்தார். நாட்டு மக்கள் நெருக்கடி நிலைமையில் இருக்கும்போதும் கூட அவர்களின் கண்ணீரை விற்று டொலரைப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என்றார்.

# மீண்டுமொரு கருப்பு...

பாராளுமன்றத்தில் நேற்று (5) பிரதமரின் உரை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 27 ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் பாதுகாப்பு செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் 5, 6 ஆம் திகதிகளில் கரும்புலிகள் நினைவு தினத்தில் விடுதலைப்புலிகள் செய்ததை போன்று காட்டி, வடக்கிலோ தெற்கிலோ வெளிநாட்டு உளவு நிறுவமொன்றால் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளதா? பாதுகாப்பு சபையில் பேசப்பட்டுள்ளதா? இல்லையென்றால் இது பொலிஸ்மா அதிபர் நினைப்பதா? இதனை சாதாரண விடயமாக கருத முடியாது. அரசாங்கத்திற்கு எதிரான எழுச்சிகள் உருவாகியுள்ள இந்த நேரத்தில் மனுஷ நாணயக்கார எம்.பி உரையாற்றும் போது, 9 ஆம் திகதி பெரிய வாகனங்கள் எரியலாம் என்றும், வீடுகள் எரியலாம் என்றும் கூறியுள்ளார். இது தொடர்பில் சந்தேகங்கள் உள்ளன. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை தடுப்பதற்காக அரசாங்கமே திட்டமிட்டு குழப்பகரமான வேலைகளை செய்யும் நோக்கத்தில் இருக்கின்றதா என்ற சந்தேகங்கள் எழுகின்றன. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை திசை திருப்ப, திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றனவா என்று கேட்கின்றோம்.

திட்டமிட்டு அரசாங்கத்தால் சம்பவங்களை உருவாக்க முயற்சிக்கின்றதாகவே தெரிகின்றது. 1983 காலத்தில் இப்படி நடந்தது. செட்டியார் தெருவில் தமிழர்கள் மீது தீவைக்கப்பட்டது. அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதேபோன்று கறுப்பு ஜுலையையும் உருவாக்கினர். அவ்வாறான வன்முறைகளை மீண்டும் உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகங்கள் ஏற்படுகின்றன என்றார்.

# வங்குரோத்தாக...

எனவே, முந்தைய பேச்சுவார்த்தைகளை விட கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலையை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (5) விசேட அறிவிப்பொன்றை விடுத்த போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை எங்களால் வெற்றிகரமாக தொடர முடிந்தது. இதற்கு முன்னரும் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துடன் எமது நாடு பேச்சுக்களை நடத்தியிருக்கின்றது. ஆனால் இம்முறை நிலைமை முந்தைய எல்லா நிகழ்வுகளிலிருந்தும் வேறுபட்டது. கடந்த காலங்களில் நாம் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். ஆனால் இப்போது நிலைமை வேறு. நாங்கள் இப்போது வங்குரோத்து நாடாக பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறோம். எனவே, முந்தைய பேச்சுவார்த்தைகளை விட கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலையை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஊழியர்கள் அளவிலான உடன்பாடு எட்டப்பட்டவுடன், இது ஐ .எம்.எப் பணியாளர்கள் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். ஆனால், நமது நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதால், நமது கடன் நிலைத்தன்மை குறித்த திட்டத்தை தனித்தனியாக அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். அந்தத் திட்டத்தில் அவர்கள் திருப்தி அடைந்தால்தான் ஊழியர்கள் மட்டத்தில் உடன்பாடு எட்ட முடியும். ஆனால் இந்தச் சிரமங்களுக்கு மத்தியிலும் விவாதத்தை திறம்பட முடிக்க முடிந்தது. இப்போது அடுத்த கட்டமாக கடன் மறுசீரமைப்பு மற்றும் நிலைத்தன்மை குறித்த திட்டத்தை அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும், இது நிதி மற்றும் சட்ட வல்லுநர்களான லாசார்ட் மற்றும் கிளிஃபோர்ட் சான்ஸ் ஆகியோரால் தயாரிக்கப்படுகிறது. ஓகஸ்ட் மாதத்திற்குள் இந்த அறிக்கையை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்பிப்போம் என்று நம்புகிறோம்.

நமது பொருளாதாரம் தற்போது சுருங்கி வருகிறது. நாங்கள் அதை மாற்ற முயற்சிக்கிறோம். மத்திய வங்கி புள்ளிவிவரங்களின்படியும், ஐ.எம். எப் புள்ளிவிவரங்களின்படி, எதிர்மறை நிலையில் உள்ளது. இது ஒரு தீவிரமான நிலை. இதன்போது உறுதியான பயணத்தை மேற்கொண்டால், 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்ட முடியும்.2026 ஆம் ஆண்டளவில் நிலையான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு.

அதேபோல் இதுவரை நாங்கள் செலுத்த வேண்டிய கடனைப் பற்றி உங்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு ஜூன் முதல் டிசெம்பர் வரை 3.4 பில்லியன் அமெரிக்க டொலரும், 2023இல் 5.8 பில்லியன் அமெரிக்க டொலரும், 2024இல் 4.9 பில்லியன் அமெரிக்க டொலரும், 2025இல் 6.2 பில்லியன் அமெரிக்க டொலரும், 2026இல் 4 பில்லியன் அமெரிக்க டொலரும், 2027இல் 4.3 பில்லியன் அமெரிக்க டொலரும் செலுத்த வேண்டியுள்ளது. 2027 ஆம் ஆண்டில் மொத்தமாக 28 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக செலுத்த வேண்டும். 2021ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்கத்தின் மொத்தக் கடன் சுமை 17.5 டிரில்லியனாக இருந்தது. மார்ச் 2022 இல் அது 21.6 டிரில்லியனாக அதிகரித்துள்ளது என்றார்

## இராஜினாமா செய்யவும் தயார்

அதேபோல் அவர்களுக்கு இடமளித்து பிரதமர் பதவியை இராஜினாமா செய்யவும் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

நாங்கள் முன்வைத்த திட்டத்தை விட பயனுள்ள திட்டம் இருந்தால், வேகமான திட்டம் இருந்தால், அதை முன்வைக்கவும். நாம் அதை விவாதிக்கலாம். மீட்புக்கு மிகவும் பயனுள்ள பாதை என்றால் அதை இயக்கவும். தம்மை ஒப்படைத்தால் ஆறு மாதங்களில் நாட்டை மீட்டெடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். உண்மையில், அதைச் செய்ய முடிந்தால் அது மிகவும் நல்ல விஷயம். பொருளாதார வளர்ச்சி எதிர்மறை ஆறு அல்லது ஏழாகச் சரிந்த ஒரு நாட்டை ஆறு மாதங்களில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்திற்குக் கொண்டு செல்வது உலகில் எந்த நாட்டிலும் நடக்காத செயல். ஆனால் இதுவரை அது நடக்கவில்லை என்ற அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்தை நாம் நிராகரிக்க முடியாது. ஆறு மாதத்துக்குள் நாட்டை மீட்டெடுக்கும் திட்டம் அவருக்கு இருந்தால் நன்றாக இருக்கும். அத்தகைய திட்டத்தால், குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். அதுமட்டுமின்றி உலகிற்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகவும் அமைகிறது.

எனவேதான் இந்தத் திட்டத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் ஜனாதிபதியிடம் செல்ல விரும்பவில்லை என்றால் இந்தப் பாராளுமன்றத்தில் முன்வையுங்கள். அதை இந்த பாராளுமன்றத்தில் விவாதிப்போம். அந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தும் திட்டத்தை விட சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருந்தால் அதைச் செயல்படுத்துவோம். அத்தகைய திட்டம் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை வெல்லும் அளவுக்கு புத்திசாலித்தனமாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்,

# ஐவரடங்கிய நீதிமன்றம்

சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரியை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் அனைத்துப் பணிகளில் இருந்தும் விடுவித்துள்ளதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவப் படைப் பிரிவு இராணுவப் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவுசெய்து வருகின்றது.

# நான் குற்றவாளி அல்ல

பாராளுமன்றத்தில் நேற்று (5) உரையாற்றும் போது, மனுஷ நாணயக்கார உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில், குற்றவாளி என்று குறிப்பிடப்பட்டுள்ள நபருடன் எப்படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்திப்பை நடத்தியுள்ளார் என்றும், அவருடன் எப்படி இணைந்து செயற்படப் போகின்றார் என்றும் வெளியிட்ட கருத்து தொடர்பில் பதிலளித்து உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் 6 மாதங்களுக்கு முன்னர் இருந்தே ஜனாதிபதியுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கலந்துரையாடி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு கோரிக்கை விடுத்தோம். அந்த அரசாங்கத்தில் பொறுப்பை ஏற்க நாங்கள் தயார் என்றும் கூறப்பட்டது. இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையின்படி வழக்கு தொடர்வதென்றால் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அதனை செய்ய முடியும் என்றார்.

# தாக்குதலுடன் அரசாங்கம் தொடர்பில்லை

குருநாகல் பிரதேசத்தில் இராணுவ அதிகாரியொருவர் நபர் ஒருவரைத் தாக்கியமை தொடர்பில் விரிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என தெரிவித்த அவர், அண்மைக் காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் நடைபெறும் சம்பவங்களானது சட்டவிரோதமாக எரிபொருளை சேகரிப்பவர்களால் முன்னெடுக்கப்படுகிறது. குருநாகல் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபரும் அவ்வாறான ஒருவர் என்றே தெரிய வருகிறது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் தீ உள்ளிட்டவைகளால் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் பாரிய அழிவுகள் ஏற்படும். அவற்றைத் தடுப்பதற்காக பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் அதிகாரங்கள் அடாவடிக்காரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் பாதாள குழுவினர் தொடர்புபட்டுள்ளனர். நாட்டில் எரிபொருள் இல்லையென்று கூறினாலும் பல இடங்களில் சட்டவிரோதமாக சேகரிக்கப்படும் எரிபொருள் கைப்பற்றப்படுகின்றன. இவ்வாறு சேகரிப்பவர்கள் தான் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

அதனை கட்டுப்படுத்த துப்பாக்கிச் சூடு பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு வெளிவரும் காணொளிகளின் ஒரு காட்சிகளையே நாம் பார்க்கின்றோம். மறுபுறம் என்ன நடக்கிறது என்பது தெரியாது. எனவே காணொளிகளை வெளியிடும் போது ஆரம்பம் தொடக்கம் என்ன நடக்கிறது என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பாதுகாப்பு பிரிவினர் மீதும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் மீதும் தாக்குதல் நடத்தப்படுகின்றன. அது தொர்பிலும் ஊடகங்கள் கதைக்க வேண்டும் என்றார்.

# சபையை விட்டு...

பாராளுமன்ற அமர்வுகளை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (5) பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகி சில நிமிடங்களுக்குள்ளேயே ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்திருந்தார். இதன்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்து சபையில் உரையாற்றிக் கொண்டிருந்தார். எவரும் எதிர்பாராத நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷா டி சில்வா, நளீன் பண்டார உள்ளிட்ட எதிர்க்கட்சி எம். பிக்கள் ஜனாதிபதிக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு, 'கோட்டா கோ ஹோம்' என்ற கோஷத்தை எழுப்பி சபையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தனது உரை நிறைவடையும் வரையில் அமைதி காக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியிடம் கேட்டுக் கொண்டார். எனினும், அவர்கள் ரணிலின் கோரிக்கைக்கு செவிசாய்க்காது தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமர் ரணிலின் உரை நிறைவடைந்தும் ஐக்கிய மக்கள் சக்தியினர் ஜனாதிபதிக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்ததால் பாராளுமன்ற நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார். இதனால் வேறு வழி இல்லாமல் எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல் சபையிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்போது சபையில் இருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எழுந்து நின்று எதிர்க்கட்சியினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

# கஸினோ..

குறித்த சட்டத்தின் ஒழுங்கேற்பாடுகளை வலுவாக்கம் செய்வதற்கான கட்டளைகள் இதுவரை பிறப்பிக்கப்படாமையால், இதுவரை எந்தவொரு சீட்டாட்டத் தொழிலுக்கு குறித்த சட்டத்தின் கீழ் உரிமங்கள் வழங்கப்படவில்லை.

இந்நிலைமையின் கீழ் தற்போது சீட்டாட்டத் தொழிலை மேற்கொண்டு செல்கின்ற நிறுவனங்களிடமிருந்து முறையான வகையில் குறித்த வரி அறவீடுகளை மேற்கொள்வது சிரமமாக உள்ளது. அதனால், அவ்வாறான வியாபாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கு மற்றும் அரசால் அறவிடப்பட வேண்டிய குறித்த வரியை அறவிடும் சீட்டாட்டத் தொழில், பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் பொருத்தமான திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கும் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# விவசாயக் கடன் தள்ளுபடி

இந்நிலைமை ஒட்டுமொத்த சனத்தொகையில் 30 சதவீதத்தினராகிய விவசாயிகளுக்கு தாங்கிக் கொள்வதற்கு சிரமமாக இருப்பதுடன், இரசாயன உரப் பாவனைக்குப் பதிலாக இயற்கை உரப் பாவனையை அறிமுகப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தால் விவசாயிகள் மேலும் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

இந்நிலைமையின் கீழ் நெற்பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளால் பெறப்பட்டுள்ள கடன்தொகையை மீளச் செலுத்துவதற்கு இயலாமல் போயுள்ளதுடன், குறித்த கடன்களை அறவிடமுடியாக் கடனாக வங்கிகள் வகைப்படுத்தியுள்ளன.

அதனால், எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான கடன்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகமான விவசாயிகள் தகைமையற்றவர்களாவதற்கு வாய்ப்புள்ளமையால், அரச தலையீட்டில் அவர்களுக்கு சலுகைகளை வழங்குவது அத்தியாவசியமாகவுள்ளது.

அதற்கமைய, இரண்டு ஹெக்ரயார் அல்லது அதற்குக் குறைவான காணியில் நெற்செய்கைக்காக அரச வங்கியிலிருந்து கடன் பெறப்பட்டு தற்போது மீளச் செலுத்துவதற்கு இயலாமல் போயுள்ள ஆரம்பக் கடன் தொகையை தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் ரணில் விக்கிரமசிங் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# கண்டிக்காது...

இலங்கைக்கு கண்டனம் தெரிவிக்காமல் மத்திய அரசு வேடிக்கை பார்ப்பது தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகுமென தெரிவித்துள்ளார்.

"இலங்கைக் கடற்படையினரால் தலா 12 மீனவர்களென ஏப்ரல் 2, ஜூலை 1 ஆம் திகதிகளில், 24 பேரை கைது செய்தனர். ஜூலை 4 ஆம் திகதி 5 மீனவர்களை கைது செய்தனர். மத்திய பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அரசாங்கம், இலங்கை அரசுக்கு உரிய முறையில் அழுத்தம் கொடுத்து, கண்டனம் தெரிவிக்காமல் வேடிக்கை பார்ப்பது தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும் வைகோ தெரிவித்தார்.

# 50% குறைந்துள்ளது

50% குறைந்துள்ளது. அவர்களின் வாங்கும் திறன் சுமார் 50% குறைந்துள்ளது. நேர்மறையான கருத்துகளை முன்வைப்பது எளிது. ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்கு விடை காண்பது கடினம். இதற்கு என்ன தீர்வு? கூடிய விரைவில் ரூபாயை நிலைப்படுத்துதல், வீழ்ச்சியடைய விடாமல் ரூபாயை வலுப்படுத்துதல். அந்த நோக்கத்திற்காக, எதிர்காலத்தில் பணம் அச்சிடுவதை மட்டுப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தியுள்ளோம் எனக் கூறினார்.

# உலக உணவுத்...

அதேபோல் எனது அழைப்பின் பெயரில் உலக உணவுத் திட்டத்தின் பிரதானி அடுத்தவாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டம், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து உணவு கிடைப்பதை அதிகரிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். நாம் புதிதாக சிந்திக்க வேண்டும் என்றார்.

# 14 ஆவது மரணம்...

காரில், சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறே அவர் மரணமடைந்துள்ளார். அந்த எரிபொருள் வரிசையில் சுமார் 2 மணிநேரம் அவர் காத்திருந்துள்ளார் என அறியமுடிகின்றது.

அங்கொட, கொத்தொட்டுவையைச் சேர்ந்த எஸ். டி.குணரத்ன என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். எரிபொருள், சமையல் எரிவாயு நெருக்கடிகளின் பின்னர், இதுவரையிலும் 14 பேர் மரணமடைந்துள்ளனர் என்பது அவதானத்துக்குரியது.

# ஆறு மாதத்தில் தேர்தலுக்கு செல்ல நடவடிக்கை எடுப்போம்

நாங்கள் அரசாங்கத்தை பொறுப்பேற்றால் பாராளுமன்றத்தில் 225 பேருக்குள் இருந்து அமைச்சரவையை அமைத்து, குறுகிய காலத்திற்குள் நாட்டை வழமை நிலைக்கு கொண்டு வரக் கூடிய வேலைத்திட்டங்களுடன், ஆறு மாதத்தில் பொதுத் தேர்தலுக்கு செல்ல நடவடிக்கை எடுப்போம் என்று ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (5) பிரதமரின் உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாங்கள் சில யோசனைகளை முன்வைத்தோம். அவை இரண்டு விடயங்களை உள்ளடக்கியது. அதில் முதலாவதாக, இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் விலகி எங்களிடம் ஒப்படைத்தால், எங்களுக்கு விருப்பமான அமைச்சரவையை இந்த 225 பேருக்குள் இருந்து உருவாக்கி அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஏற்க நாங்கள் தயார் என்பதனை கூறியிருந்தோம். மே மாதம் 11 ஆம் திகதியே இதனை கூறியிருந்தோம்.



இதேவேளை, இரண்டாவது யோசனையாக எங்களுக்கு அரசாங்கம் அமைக்க இடமளிக்காவிட்டால் எவரேனும் குழுவினர் அரசாங்கத்தை அமைப்பதென்றால், அந்த அரசாங்கத்தால் முறையான கால வரையறையை முன்வைத்தால் எதிர்க்கட்சியில் இருந்து ஆதரவளிக்க நாங்கள் தயார் என்று கூறியிருந்தோம்.

ஏற்பட்டுள்ள நெருக்கடி நீண்டகாலமாக உருவாகி வந்தது. இதில் பொருளாதாரத்துடன் அரசியலும் தொடர்புபட்டுள்ளது. இங்குள்ள அரசியல் கலாசாரம், இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ளது. மக்களுக்காக ஏதாவது அபிவிருத்தி நடந்துள்ளதா? அனைத்தும் ஊழல் மோசடியுடனான அரசியல் கலாசாரத்தாலேயே நடந்துள்ளன. இதனை மாற்ற வேண்டும் என்று கூறியுள்ளோம். மக்கள் ஆணை கிடையாது என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். குறைந்தது எனக்கு பாராளுமன்றத்தில் அமர்வதற்கு மக்கள் ஆணை இருந்தாலும் அதற்கு மக்கள் ஆணை இருக்கவில்லை. அவ்வாறானவர் கால எல்லை இன்றி ஆசனத்தில் இருப்பது நியாயமா? நீங்கள் ஜனநாயகவாதி என்று கூறுகின்றனர். ஆனால் அவ்வாறான ஒருவர் அந்த ஆசனத்தில் அப்படி இருப்பது; எந்தளவுக்கு நியாயமானது? நீங்கள் அந்த ஆசனத்தில் இருந்து எழும்ப தயார் இல்லை என்றால் அதற்கு நாங்கள் எதிர்ப்போம் என்றார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



# சஜித்துக்கு சவால் விடுத்தார் ஹரின்

ஒரு எரிபொருள் கப்பலையாவது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாட்டுக்கு கொண்டு வந்தால் உடனடியாகத் தான் பதவி விலகத் தயார் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சபையில் சவால் விடுத்துள்ளார்.மூன்று மாதங்களுக்கு மேல் அமைச்சுப் பதவியில் நானும், மனுஷ நாணயக்காரவும் நீடிக்க போவதில்லை. எங்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது எனவும் தெரிவித்தார்

நாட்டில் பிரதானமாக ஐந்து பிரச்சினைகள் காணப்படுகின்றன. போராட்டங்கள் இடம்பெறுகின்றன. கொள்ளையடிக்கப்பட்ட பணங்களை மீள பெற வேண்டும் என்கிறார்கள். 2019 க்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை கொண்டு செல்ல வேண்டும் என்கிறார்கள். எரிபொருள் பிரச்சினை காணப்படுகிறது. பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் எனவும் கேட்கிறார்கள்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் பொறுப்பு கூற வேண்டும். சஜித் பிரேமதாஸ முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை திருமணம் செய்யப் பார்க்கிறார். கத்தோலிக்க மக்கள் அனைவரும் குற்றவாளி என நினைக்கும் மைத்திரியுடன் சஜித் இணைவதால், 52 நாள் அரசாங்கத்தின் போது மைத்திரியுடன் சஜித்துக்கு டீல் இருந்ததாகவே சந்தேகம் ஏற்படுகிறது.

அரசாங்கத்தை அமைக்க மைத்திரிபால சிறிசேன, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரை ஒன்றிணைத்து ஐக்கிய மக்கள் சக்தி மூன்றிலிருந்து பெரும்பான்மையை பெறவேண்டும். இதில் எமக்கு எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை. மூன்று மாதங்களுக்கு மேல் அமைச்சுப் பதவியில் நானும், மனுஷ நாணயக்காரவும் நீடிக்க போவதில்லை. எங்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது.

10ஆம் திகதிக்கு பின்னர் எரிபொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் தொடர்ந்து வர உள்ளன. இவ்வாறான நிலையில் நாம் இதனை செய்து விடுவோம் என்கிற அச்சத்திலேயே இதனை குழப்ப பலரும் முயற்சிக்கிறார்கள். எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளால் நாடு தொடர்ந்து வீழ்ச்சியை நோக்கியே பயணிக்கும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மூன்று எரிபொருள் கப்பல்களை கொண்டுவர முடியும் என கூறுகிறார். மூன்று வேண்டாம் ஒரு எரிபொருள் கப்பலையாவது கொண்டு வாருங்கள். நாங்கள் பதவி விலகத் தயாராக இருக்கிறோம் எதுவும் தெரிவித்தார்.



## போராட்டம் என்ற பெயரில்
## 9ஆம் திகதி வீடு,வாகனங்களை கொளுத்த சதித் திட்டம்

பா.நிரோஸ்

எதிர்வரும் 9ஆம் திகதி இடம்பெறவுள்ள போராட்டத்தின் போது வாகனங்கள், வீடுகள் என்பவற்றைக் கொளுத்தி, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

போராட்டங்களை நாம் மதிக்கிறோம். ஆனால், இதுபோன்ற அரசியல் செயற்பாடுகளை போராட்டம் என கூற வேண்டாம். நாட்டில் ஆயிரக்கணக்கானவர்களை கொன்று அதனூடாக ஆட்சியை கைப்பற்றுவதற்கே முயற்சிக்கப்படுகிறது. நாட்டு மக்களை வரிசைகளின் நிற்க வைக்கவே எதிர்க்கட்சி திட்டமிடுகிறது. ஹெல்மெட் அணிந்தவர்கள் இந்த வரிசைகளுக்குள் சென்று வன்முறை சம்பவங்களை தூண்டுகிறார்கள். இந்த ஹெல்மெட் குழுக்கள் யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

போராட்டத்தின் போது ஹெல்மெட் அணிந்த எவராவது எரிபொருள் நிரப்பு நிலையங்களை கொளுத்தினாலோ அல்லது வேறோர் இடங்களில் தீயை பற்ற வைத்தாலோ ஒட்டுமொத்த நாடுமே பற்றி எரியும் எனவும் எச்சரித்தார்.



## அதிகாரத்தை எவ்வாறு கைப்பற்றுவது
## வாருங்கள் கற்பிக்கின்றேன்

பா.நிரோஸ்

அதிகாரத்தை கைப்பற்ற முடியாத எதிர்க்கட்சியே இன்றும் உள்ளது. என்னுடன் இருக்கையில் இரண்டு மூன்று தடவைகள் நான் அதிகாரத்தை கைப்பற்றி இவர்களுக்கு கற்பித்தேன். ஆனால் இவர்கள் அதனை முறையாக கற்கவில்லை. எனவே ஒரு மாதம் என்னிடம் வகுப்பிற்கு வாருங்கள், அதிகாரத்தை எவ்வாறு கைப்பற்றுவது என்பது குறித்து எதிர்க்கட்சிக்கு கற்பிக்கின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (5) எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதில் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்றால் சகலரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செல்ல வேண்டும். அதனை செய்யாது சபையில் கூச்சலிடுவதால் இவர்களால் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. இலங்கையில் உள்ள மிகவும் பலவீனமான எதிர்க்கட்சியே இன்று சபையில் உள்ளது. பதாகைகளை தூக்கி பிடித்து அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. அதிகாரம் என்பது வலுக்கட்டாயமாக கைப்பற்ற வேண்டிய ஒன்றாகும் என்றார்.

# கட்டாரிடம் கையேந்துவது வெட்கம் இல்லையா?

நல்லாட்சி அரசாங்கத்தின் போது கட்டாரிடமிருந்து நிவாரணம் பெற்றமைக்கு அதனை பயங்கரவாத செயற்பாடு என கூறியவர்கள், கட்டாரிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள இன்று கையேந்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இது உண்மையில் வெட்கக்கேடான செயல் எனவும் அவர் கூறினார்.

நாட்டு மக்கள் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வையே எதிர்பார்க்கிறார்கள். ஆனால் பிரதமரோ அனைவருக்கும் தெரிந்ததையே சபையில் வந்து பேசிக் கொண்டிருக்கிறார். நாடு வங்குரோதடைந்ததாகவே அவர் கூறுகிறார். இது அனைவருக்கும் தெரியும்.

வரிசைகளில் நிற்பவர்களுக்கு என்ன தீர்வு என்பதை ரணில் கூறுவாரா? பெருந்தோட்ட மக்களுக்கு என்ன தீர்வை வழங்கப் போகிறீர்கள்? தற்போது அமைச்சரவையில் உள்ள அமைச்சர் ஜப்பான் நிறுவனத்திடம் இருந்து இலஞ்சம் பெற முயற்சித்துள்ளார். இதனால் ஜனாதிபதி கவலையில் உள்ளார். நாட்டைக் கட்டியெழுப்ப என்ன தீர்வு என எங்களிடம் கேட்கிறார். முதலில் உங்கள் அமைச்சரவையில் இருக்கும் இலஞ்ச, ஊழல் அமைச்சர்களை நீக்குங்கள். ஜப்பான் நிறுவனத்திடம் இருந்து இலஞ்சம் கோரியது யார் என ஜனாதிபதியிடம் கேளுங்கள் எனவும் சஜித் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருக்கும்போது, கட்டாரிடமிருந்து நிவாரணங்களை பெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து,, அதனை பயங்கரவாத செயற்பாடு என தற்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் விமர்சித்தார்கள்.

இப்போது எரிபொருளை பெற்றுக்கொள்ள கட்டாரிடம் கையேந்தி நிற்கிறார்கள். இது வெட்கப்பட வேண்டிய செயற்பாடு எனவும் தெரிவித்தார்.



## புதிய அரசியலமைப்புக்கு பாராளுமன்ற தெரிவுக் குழு

பா.நிரோஸ்

22ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கையோடு புதிய அரசியலமைப்பு ஒன்றை தயாரிப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழு உருவாக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்துள்ளது. இந்த நிலைக்கு நாடு செல்லும் என நாம் முன்கூட்டியே எச்சரித்திருந்தோம். இந்நிலையில் அரசாங்கத்திற்கு எதிராகவும் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் மக்கள் போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டங்கள் ஊடாக பலவற்றை சாதித்து இருக்கிறார்கள்.அதுபோல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து விலக்குவதற்கும் மக்கள் தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள். 22ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட வேண்டிய உள்ளடக்கங்களையே கையாள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. 22 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் மாத்திரம் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் என மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. எனவே தான், இதனை சமர்ப்பித்த கையோடு நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான மக்கள் கருத்துகளைப் பெறுவதற்கு பாராளுமன்றத் தெரிவிக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார். 22ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சுயாதீன குழுக்களின் சுயாதீனம் உறுதி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

# ஓமான் தூதுவர்– சபாநாயகர் சந்திப்பு

சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு நாட்டில் இருந்து புறப்படும் இலங்கைக்கான ஓமான் தூதுவர் ஜூமா ஹம்தான் ஹசன் அல்மலிக் அல்ஷேஹி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்திருந்தார். எரிபொருள், எரிவாயு, முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதாக ஓமான் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை - ஓமான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கான ஓமான் தூதுவரின் 8 வருட சேவைக்காலத்தில் வழங்கிய அனைத்து ஒத்துழைப்புகளுக்கும் சபாநாயகர் நன்றியைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்கவும் கலந்துகொண்டார்.



#### இராணுவத்துக்கு

## சுற்றுலா பயணி ‘சல்யூட்’



■ எப்.முபாரக்

வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர், திருகோணமலை பகுதிக்கு சுற்றுலாச் சென்ற போது, தனது வாகனத்துக்கு எரிபொருள் நிரப்ப கந்தளாய் பிரதேசத்திலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் வரிசையில் நின்றிருந்தார்.

இதைக் கண்ட இராணுவத்தினர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணி சென்ற வாகனத்தை முன்னால் எடுத்து, அந்த வாகனத்துக்குத் தேவையான எரிபொருளை பெற்றுத்கொடுத்தார்கள்.

இந்தச் செயற்பாட்டுக்கு, இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணி ‘சல்யூட்’ அடித்து நன்றி தெரிவித்து, அவ்விடத்திலிருந்து விடைபெற்றார்.

#### எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

# இராணுவத்துடன் பிக்கு ரகளை

### சமாதானப்படுத்திய பொலிஸார்; மக்கள் விசனம்

■ எப்.முபாரக்



கந்தளாயில் தமக்கு பெற்றோல் பெற்றுத்தருமாறு கோரி, இராணுவத்தினருடன் பௌத்த பிக்கு ஒருவர் ரகளையில் ஈடுபட்டார்.

இச்சம்பவம், கந்தளாய் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் நேற்று முன்தினம் (04) இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கந்தளாயில் உள்ள மெதகம விகாரையின் விகாராதிபதியே இவ்வாறு எரிபொருள் நிரப்புமாறு கோரி, இராணுவத்தினருடன் ரகளையில் ஈடுபட்டார்.

பிக்கு தினமும் எரிபொருள் நிரப்புவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, அன்றைய தினம் எரிபொருள் நிரப்ப முடியாது என தெரிவித்ததை அடுத்தே பிக்கு கடும் ரகளையில் ஈடுபட்டார்.

தமக்கு எரிபொருள் நிரப்ப முடியா விட்டால் இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்து, இராணுவத்தினருக்கு கடுமையான வார்த்தை பிரயோகங்களை பிக்கு மேற்கொண்டார்.

இதனையடுத்து பிக்குவை சமாதானப்படுத்திய பொலிஸார், எரிபொருள் நிரப்பினர்.

இதன்போது வரிசையில் எரிபொருளுக்காக காத்திருந்த பொதுமக்கள், பிக்குவின் இந்தச் செயற்பாட்டை கடுமையாக விமர்சித்தனர். இதையடுத்து பிக்கு அங்கிருந்து சென்று விட்டார்.

## புகையற்ற அடுப்பு கண்டுபிடிப்பு



■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

மட்டக்களப்பு மாவட்டச் செயலக சமுர்த்திப் பிரிவில் கடமையாற்றும் தவராசா சுரேஷ் எனும் உத்தியோகத்தர் புகையற்ற புதிய வகை அடுப்பை கண்டுபிடித்துள்ளதுடன், அந்த அடுப்பை நேற்று (05) மாவட்டச் செயலகத்தில் அறிமுகம் செய்து வைத்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் இக்காலகட்டத்தில், எரிபொருள் இல்லாமல் இயங்கக்கூடிய புதிய வகை அடுப்பை மாவட்டச் செயலாளர் க.கருணாகரனுக்கு அறிமுகப்படுத்தியதுடன், இதன் செயற்றிறன் தொடர்பாக விளக்கமளித்தார்.

இந்தப் புதிய வகை அடுப்பின் பாவனை, தற்போதைய கால கட்டத்தில் தேவை கருதி தான் இதனை உருவாக்கியதாக இதன் போது குறித்த உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தில் கூட, இந்த அடுப்பை பாவனைக்கு உட்படுத்த கூடியதாக அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமத்தை எதிர்கொண்டுள்ள இக் காலகட்டத்தில், புகையற்ற அடுப்பின் பாவனை மூலம் பணத்தை சேமிக்க முடியுமென சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்வின் போது மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன், மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் கே. தயாபரன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



#### தீவைப்பு சம்பவம்:

## கைதாகிய 38 பேரில் 09 பேருக்கு விளக்கமறியல்

■ கனகராசா சரவணன்

ஏறாவூரில் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு மற்றும் அவரின் உறவினரின் வீடு, ஹோட்டல், கடை தீவைப்பு, ஆடைத்தொழிற்சாலை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் (04) மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் 20 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து, இதுவரை 38 பேரை கைது செய்துள்ளதாக மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

மே மாதம் 10ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசணைக்கமைய, மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டுவந்தனர்.

இந்நிலையில், ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து, 16 வயதுடைய இரு சிறுவர்கள் உட்பட இதுவரை 38 பேரை கைது செய்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 வயதுடைய இரு சிறுவர்கள் உட்பட 28 பேர் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன், ஏனைய 9 பேர் தொடர்ந்து விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தொடர் விசாரணையில் நாளாந்தம் ஒருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சைக்கிளில் விழிப்புணர்வு

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்





தேசிய விபத்து வாரத்தையொட்டி, மட்டக்களப்பு மாவட்டத்தில் சைக்கிள் சவாரியூடாக விழிப்புணர்வு பவனி, நேற்று (05) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் ஆலோசனையின் கீழ், தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

‘வீதி ஒழுங்குகளை பின்பற்றி வாகன விபத்துகளை தவிர்ப்போம்’, ‘வீதியில் செல்லும் பாதசாரிகளை அவதானித்து வாகனங்களை செலுத்துவோம்’, ‘பெற்றோலுக்காக காத்திராது சைக்கிளில் செல்வோம்’, ‘மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தாது இருப்போம்’போன்ற விழிப்புணர்வு வாசகங்கள், பதாகைகளுடன் நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு சுகாதார பணிமனையில் இருந்து மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்தை கடந்து சென்ற பவனி, போதனா வைத்தியசாலையை அடைந்து, மீண்டும் அங்கிருந்து லேக் வீதி ஊடாக பிராந்திய சுகாதார பணிமனையை சென்றடைந்தது.

#### வல்வெட்டித்துறை வாசிகள் எண்மர்

## தனுஷ்கோடியில் தஞ்சம்

■ எம்.றொசாந்த், எஸ்.றொசேரியன் லெம்பேட்



யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த 08 பேர் அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சசிகலா, கதிர், கமலராணி உள்ளிட்ட 8 பேரே சிறு பிள்ளைகள் சகிதம் ஒரு படகில் ஞாயிற்றுக்கிழமை (03) புறப்பட்டு, நேற்று (05) அதிகாலை 05 மணி அளவில், தனுஷ்கோடி, அரிச்சல்முனை கடற்கரையை சென்றடைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறையில் இருந்து படகு மூலம் தமிழகம், தனுஷ்கோடி பகுதிக்கு சென்ற வேளை, இராமேஸ்வரம் கடலோரப் பாதுகாப்புப் படையினர் இவர்களை மீட்டு, மரைன் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டதாக கடலோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று (05) வரையில் 103 பேர் தமிழகத்துக்கு அகதிகளாக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

#### எரிபொருள் இன்மையால்

# பாய்மரப் படகில் மீனவர்கள்

■ மு.தமிழ்சசெல்வன்



எரிபொருள் இன்மையால் கிளிநொச்சி மீனவர்கள் பலர் பண்டையகாலத்து முறைப்படி, பாய்மர படகுத் தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

என்னும், இதன்மூலம் சொற்ப அளவு வருமானத்தை மாத்திரமே பெற முடிவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது படகுகளில் பெட்சீட், சாறி போன்ற பலமான துணிகளைக் கட்டி, கரையோர கடற்றொழிலில் ஈடுபட ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கும் அவர்கள், தமது கடலில் தம் கண்முன்னே இந்திய இழுவைப் படகுகள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருகின்றன எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் கடற்றொழில் ஈடுப்பட்டு வரும் ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் எரிபொருள் இன்மையால் தம் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

பூநகரி, பளை, கண்டாவளையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தங்களின் தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பலரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் இதுவரை எவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்த மீனவர்கள், இனியும் பொறுப்பு வாய்ந்தவர்களை நம்பி எரிபொருளுக்காக காத்திருந்தால் தமது குடும்பங்கள் உணவுக்கே வழியில்லாத நிலைமை ஏற்படுமென அங்கலாய்த்தனர்.

எனவேதான், பண்டைய காலத்து மீன்பிடி முறைமைக்கு மாறியதாகவும் தெரிவித்தனர்.

#### சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட

## மஞ்சள் மீட்பு

■ மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை, வெட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட ஒருதொகை மஞ்சளும் கிருமிநாசினியும் நேற்று முன்தினம் (04) இரவு 11 மணியளவில் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், 66ஆவது படைமுகாம்களின் இராணுவத்தினரால் அவை மீட்கப்பட்டு, பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றிவளைப்பில் 65 பெரிய உரப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2,000 கிலோ கிராம் மஞ்சளும் 03 பைகளில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மஞ்சள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியன இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், இதனுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



#### எரிபொருள் கோரி

## இருவேறு போராட்டங்கள்





■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரில் எரிபொருள் கோரி, நேற்று (05) காலை முதல் மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் மற்றும் ஓட்டோ சாரதிகள் தனித்தனியாக இருவேறு போராட்டங்களை முன்னெடுத்தமையால், மக்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டனர்.

அரச போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க முடியாத வகையில், தனியார் பஸ் உரிமையாளர்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்தை மேற்கொள்ள காத்திருந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

மன்னார் டிப்போவுக்கு வழங்கப்பட்ட 13,200 லீற்றர் டீசலில் மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பஸ்களுக்கும் வழங்குமாறு, உரிய தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வழங்கப்பட்ட 13,200 லீற்றர் டீசலில் தற்போது வரை 2,413 லீற்றர் டீசல் மாத்திரமே தனியார் பஸ்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தனியார் பஸ் சங்க உரிமையாளர்கள் மன்னார் டிப்போ அதிகாரிகளிடம் டீசல் கோரிய போதும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே, இன்று (05) காலை முதல் தனியார் பஸ்கள் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு, வீதியை மறித்தனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில், அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று (05) காலை 10 மணியளவில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் சாலைக்கு 6,600 லீட்டர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2,500 லீட்டர் டீசலையும் 13,200 லீட்டர் டீசல் வருமாக இருந்தால் 5,000 லீட்டர் டீசலையும் தனியார் பஸ்களுக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனியார் பஸ் சங்க உரிமையாளர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை, மன்னாரில் சேவையில் ஈடுபடும் ஓட்டோ சாரதிகளும் தமக்கு உரிய முறையில் எரிபொருளை வழங்க கோரி போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

விஷ பாம்புகளின் பெருக்கம் அதிகரிப்பு:

# தொழிலுக்கு செல்ல அச்சம்

■ துவாரகஷான்

மலையக பிரதேசத்தில் அண்மைக்காலமாக விஷ பாம்புகள் அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் அச்சத்தின் மத்தியிலேயே, தமது கடமைகளை செய்து வருகின்றனர்.

அனேகமான தோட்ட நிர்வாகங்கள், தேயிலை மலைகளை முறையாக் பராமரிக்காமல், பராமரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இலாப நோக்கில் செயற்படுவதால், அதிகமான பகுதிகள் காடாகி கைவிடப்பட்டுள்ள நிலை காணப்படுகின்றன.

இதன் காரணமாக, உயிர் அச்சத்துடன் ஒவ்வொரு நாளும் தொழில் செய்யவேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

இந்த நிலையில், வட்டக்கொட, மெதக்கும்புர நியூமிடில் தோட்டத்தில் இரண்டாம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துகொண்டிருந்த 43 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய், விசபாம்பு தீண்டியதால் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

அத்துடன், அக்கரப்பத்தனை பெரிய நாகவத்தை தோட்டத்திலும் நேற்று முன்தினம் (4) தேயிலை மலையில் தொழில் செய்துகொண்டிருந்த 36 வயதுடைய ஆண் ஒருவரின் காலில் விஷப்பாம்பு சுற்றியுள்ளது.

இதனால் அவரது காலின் அடிப்பகுதியில் கருப்பு நிறத்தில் மாற்றம் ஏற்பட்டதாகவும் குறித்த நபர் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பி உள்ளார் என்றும் வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்தனர்.

தபால் தொழிற்சங்க நடவடிக்கைகள்

# முடிவுக்கு வந்தன

■ ரஞ்சித் ராஜபக்ஷ

எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட பல அம்சக் கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து, நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட தபால் தொழிசங்கங்களின் தொழிற்சங்க நடவடிக்கை நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் (4) நள்ளிரவிலிருந்து நிறைவுக்கு வந்துள்ளது.

தபால்மா அதிபருக்கும் தபால் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து, இத் தொழிற்சங்க நடவக்கை நிறுத்தப்பட்டதுடன், நேற்று (5) காலை அனைத்து பிரதேச தபால் சேவைகளும் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டன.





நீரில் தத்தளித்த

# இளைஞர்கள் காப்பாற்றப்பட்டனர்

■ சேஹ்ன் செனவிரத்ன

கடந்த சில தினங்களாக கண்டி மாவட்டத்தில் மழை பெய்து வரும் நிலையில், பொல்கொல்ல நீர்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்ததால் சில வான்கதவுகள் திறக்கப்பட்டன.

இந்த நிலையில் விக்டோரியா நீர்த்தேக்கம் அமைந்துள்ள பாரகம பிரதேசத்தில் நீர் வற்றியிருந்த மண்மேட்டில் நின்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள், அதிகரித்த நீரில் சிக்கியதையடுத்து, பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவினரால் கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 3ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தலாதுஓயா பொலிஸாரால் தலதா மாளிகை பொலிஸ் பிரிவின் உயிர் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 45 நிமிடங்கள் போராடி இளைஞர்களை மீட்டுள்ளனர். இவ்வாறு காப்பாற்றப்பட்ட இளைஞர்கள் இருவரும் 28,30 வயதுடையவர்கள் என்பதுடன், இவர்கள் குருதெனிய, நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# மொனராகலைக்கும் தமிழக நிவாரணங்கள்



தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருள்கள், நேற்று முன்தினம் (4) மொனராகலை மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் 1,80,125 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

(சுமணசிறி குணதிலக)

# நடமாடும் சேவை

■ என்.ஆராச்சி

தெஹியோவிட்ட பிரதேச செயலகப் பிரிவின் ஏற்பாட்டில் கொடகம்பொல பிரிவின் பம்பேகம தோட்டத்தில் பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ் பதிவுகள் நடமாடும் சேவை இன்று (06) நடைபெறவுள்ளது.

பம்பேகம தோட்டத்தின் சிறுவர் பராமரிப்பு பிரிவில் இன்று காலை 9 மணி தொடக்கம் இந்த சேவை முன்னெடுக்கப்படும் என தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் சந்தன அநுருத்த பியதாஸ தெரிவித்தார்.

பம்பேகம தோட்டத்தை அண்மித்து வாழும் மக்களுள் சுமார் 40 பேருக்கு பிறப்பு சான்றிதழைப் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த தோட்டத்தில் இதுவரை சட்டரீதியாக திருமண பதிவின்றி குடும்பமாக வாழ்ந்து வரும் 10 பேருக்கு சட்டரீதியான பதிவு திருமணத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பழ வித்தால் பறிபோன உயிர்

■ சுமணசிறி குணதிலக

பழமொன்றின் வித்து தொண்டையில் சிக்கி 9 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

மொனராகலை, சுதுவத்துபாரயில் வசித்து வந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவன் 28ஆம் திகதி வீட்டுக்கு அருகிலிருந்த கோன் எனப்படும் மரத்திலிருந்து, பழத்தைப் பறித்து சாப்பிட்ட போது, அதன் வித்து தொண்டையில் சிக்கியுள்ளது.

இதனையடுத்து சிறுவன் உடனடியாக மொனராகலை வைத்தியசாலையில்



அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

மலையகத்தில் ஒரு நாள் இடைவெளியின் பின்னர்

# கடும் காற்றுடனான மழை மீண்டும் ஆரம்பம்

■ எஸ். சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ, எஸ் யோகா

மலையகத்தின் மேற்கு பகுதிகளில் நேற்று (5) அதிகாலை தொடக்கம் கடும் காற்றுடனான மழை பெய்து வருவதால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் காற்றால் பிரதான வீதிகளில் பாரிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், போக்குவரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தின.

அத்துடன் மரங்கள் முறிந்து மின்கம்பங்களில் விழுந்தமையால் ஹட்டன், மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் அடிக்கடி மின்துண்டிப்பும் ஏற்பட்டது.

அதேவேளை ஹட்டன்-



மல்லியப்பு சந்தி பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் காவலரணின் கூரைகள் காற்றில் அள்ளுண்டு சென்றன.

மேலும் கம்பளை நகரில் இருந்து சக்கரான்கொட்டுவ பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் மரம் முறிந்து விழுந்தமையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



அத்துடன், கெசல்கமுவ ஓயா ஆற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால், இந்த ஆற்றின் நீரை அடிப்படை தேவைகளுக்கு பயன்படுத்தும் மக்கள், அந்த பிரதேசத்திற்கு செல்லவேண்டாமென பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதனால் காசல்ரீ நீர்தேக்கத்தில் நன்னீர் மீன் பிடிப்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பங்கசு தொற்றால்

# டூரியன் பழ உற்பத்தியில் வீழ்ச்சி

■ என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில் டூரியன் பழ உற்பத்தி இம்முறை வீழ்ச்சியடைந்துள்ளது.

கேகாலை மாவட்டத்தில் எட்டியாந்தோட்டை, கித்துல்கல, தெரணியகல உள்ளிட்ட பிரதேசங்களில் டூரியன் பழம் அதிகம் விளைவதுடன், இம்முறை பழங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் தாக்கம் காரணமாக அதிக வருமானம் கிடைக்கவில்லை என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கேகாலை மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் பழ உற்பத்திக்கு பொறுப்பான அதிகாரி காஞ்சன ஹுருக்கமுவ, *phytophthora palmivora* என்ற பங்கசு மூலம் இந்த நோய் பரவுகிறது. இதனைத் தடுப்பதற்காக *mancozeb* எனப்படும் இரசாயனப் பொருளைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், டூரியன் பழ மரங்கள் அதிக உயரமாக வளர்வதால் குறித்த இரசாயனப்



பொருளைப் பயன்படுத்துவது கடினமாது. ஒரு மரத்துக்கும் மாத்திரம் இந்த திரவத்தை தெளித்து இந்தப் பங்கசு நோயை பரவுவதைத் தடுக்க முடியாது. எனவே அனைத்து மரங்களுக்கும் இத்திரவத்தை தெளிக்க வேண்டும். அத்துடன் தற்போது இந்தத் திரவத்தைப் பெற்றுக்கொள்வதிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த டூரியன் பழ மரங்களுக்கு சூரிய வெளிச்சம் கிடைப்பது மிகவும் குறைவு. எனவே சூரிய வெளிச்சம் இந்த மரங்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடுகளை திட்டமிடுவதன் ஊடாக, இந்த நோயை கட்டுப்படுத்தவோ பரவுவதைக் குறைக்கவோ முடியும் என்றார்.

# சட்டவிரோத மருந்தகம் லிந்துலையில் சுற்றிவளைப்பு

■ சுஜிதா

லிந்துலை பிரதேச பொது சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட மெராயா நகரில் அனுமதி இன்றி, சட்டவிரோதமாக இயங்கிய மருந்தகத்தை நேற்று முன்தினம் (4) சுகாதார அதிகாரிகள் சுற்றி வளைத்தனர்.

இதன் உரிமையாளர் நீர்கொழும்பு பிரதேசத்தில் வசித்து வருவதாகவும் கடந்த சில மாதங்களாக குறித்த மருந்தகம் மெராயா நகரில் இயங்கி வந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரிக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து, பொலிஸாருடன் சென்று பரிசோதனைகளை முன்னெடுத்தபோது, சட்ட ரீதியாக பதிவு செய்தமைக்கான எந்தவித ஆவணமும் இல்லாத காரணத்தால், குறித்த மருந்தகத்தை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக பொது சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ரேஷ்னி துரைராஜ் தெரிவித்தார்.

குறித்த மருந்தகத்தின் உரிமையாளரை தொலைபேசி மூலம் பல தடவைகள் தொடர்பு கொண்ட போதிலும் அவர் பதில் அளிக்கவில்லை என்றும் மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வுக்கூடம் மற்றும் மருந்தகம் ஒன்றை நடத்தி செல்லும் போது அதற்கென பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களை நியமித்திருப்பது சுகாதார சட்டமாகும். இருப்பினும் எந்தவித பயிற்சிகளும் பெறாத அனுமதி இல்லாத உத்தியோகத்தர்களுடன் இந்த ஆய்வுக்கூடம் இதுவரை காலமும் இயங்கி வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகத்துறையையும்

# அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்குக

## வடிவேல் எம். பி கோரிக்கை

ஊடகத்துறையும் அத்தியாவசிய சேவைகளினுள் உள்வாங்கப் படுதல் கட்டாயமானதாகும் என நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பெற்றோல், டீசல் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இந்த நிலையில், ஊடகத்துறை அத்தியாவசிய சேவையில் ஏன் வரையறுக்கப்படவில்லை.

நாட்டினுடைய தற்போதைய நிலைமைகளை உடனுக்குடன் மக்களுக்கு வழங்கும் பாரியதொரு சேவையை ஊடகத்துறை செய்து வருகின்றது. பிராந்திய செய்தியாளர்கள் தற்போது பெற்றோல், டீசல் தட்டுப்பாட்டால் செய்தி சேகரிப்பதில் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பெருந்தோட்ட பிரதேசங்களில் மக்கள் முகம் கொடுக்கும் இன்னல்களை வெளிக்கொணர்ந்ததன் பங்கு ஊடகத்துறையை சாரும். ஆகவே, கண்டிப்பாக அத்தியாவசிய சேவைகளில் ஊடகத்துறையும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றார்.

நாடு ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறது. மக்களின் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன. கர்ப்பிணிகளுக்கும் சிறுவர்களுக்கும் தேவையான மருந்துகள், போசனை உணவுகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.



நம் குழந்தைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் நிலையே இன்று காணப்படுகிறது என்றார்.

# அகால மரணங்களைத் தவிர்க்க அவதானமே அதிமுக்கியம்

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் பிறப்பு எவ்விதத்தில் இருக்கிறதோ, அவ்விதத்தில் இறப்பும் இருக்கும். இதுவே உலக நியதியும்கூட! இயற்கை மரணங்கள், தன்னுயிரை மாய்த்துக்கொள்ளல், படுகொலை, அகால மரணம் என மரணங்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

இயற்கை மரணங்கள் என்றாலும் சகலரும் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய நாளொன்றில், வைபவமொன்றில் இடம்பெறுமாயின், அச்சந்தர்ப்பத்தில் இருப்பவர்கள் நினைவில் வைத்துக்கொள்வர். அகால மரணங்களில் சிலவற்றை மறக்கவே முடியாது. படுகொலைகளும் அப்படித்தான் எளிதில் மறக்க முடியாதவையாகும்.

எரிபொருள் வரிசையில் காத்திருந்த போது ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை ஜூலை 4 ஆம் திகதியுடன் 14ஆக அதிகரித்துள்ளது. திடீரென நோய்வாய்படல், தூக்கமின்மை, சாப்பாடு கிடைக்காமை, அடுத்தடுத்த கட்டங்களை யோசித்து மனவிரக்தி; இவற்றால், எரிபொருள், சமையல் எரிவாயு வரிசைகளில் மரணங்கள் சம்பவித்துள்ளன.

இந்த 14 மரணங்களும் வீடுகளில் அல்லது வைத்தியசாலையில் இடம்பெற்றிருக்குமாயின், உறவினர்களைத் தவிர வேறெவரும் நினைவில் வைத்திருக்கமாட்டார்கள். நாட்டின் நிலைமையையும் நீண்டுகொண்டு செல்லும் வரிசைகளையும் பார்க்குமிடத்து, இது இறுதியான வரிசை மரணமாக இருக்காது என்பது மட்டுமே உண்மையாகும்.

ஆனால், மரணங்கள் இடம்பெற்ற எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் ஊடாக செல்லும் போதெல்லாம் 'வரிசை மரணங்கள்' ஞாபகத்தை நெருடிவிடும். எரிபொருள் நெருக்கடி தொடர்பான ஆவணங்களில் கூட இந்த மரணங்களும் பதிவாகிவிடும்.

எரிபொருள்களை முறையாக இறக்குமதி செய்து, முறைமையாக விநியோகித்திருந்தால் இவ்வாறான அகால மரணங்களைத் தவிர்த்திருக்கலாம். அவையெல்லாம் ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களிடமே உள்ளது என்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகின்றோம்.

இதற்கிடையே ஏதாவது ஒரு பழத்தை சாப்பிடும்போது அதன் விதைகள் தொண்டையில் இறுகி மரணிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையும் ஏறுமுகத்தில் செல்கின்றது. பாடசாலைகள் இல்லை; வீட்டிலேயே நீண்ட நேரத்தை செலவழிக்கின்றனர். அன்றாடம் உணவுக்காகவாவது ஏதாவதொரு வேலையைத் தேடி பெற்றோரும் அலைந்து திரிக்கின்றனர்.

எரிபொருள் இல்லை; மருந்துக்குத் தட்டுப்பாடு; சாதாரண வலி நிவாரணியைக்கூட பெற்றுக்கொள்ள முடியாது. கடுமையான சிரமங்களுக்கு மத்தியில் வைத்தியசாலைக்குச் சென்றாலும் அங்கும் போதியளவான ஆட்பலம் இல்லை. இவ்வாறு பல்வேறான நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான காலக்கட்டத்தில் நின்று கொண்டிருக்கின்றோம்.

சிறுவர்கள் எதையாவது வாய்க்குள் போட்டு குதப்பிக்கொண்டிருந்தால், அவர்கள் தொடர்பில் பெற்றோரும் அக்கம்பக்கத்தினரும் அவதானமாக இருக்கவேண்டும். அதேபோல, தொண்டைக்குள் சென்று, இறுகக்கூடிய விதைகளுடன் கூடிய பழங்களை எவ்வாறு சாப்பிடுவது என்பதைப்பற்றி சொல்லிக்கொண்டுப்பதும் உகந்தது.

இல்லையேல், சதாகாலமும் அல்லது மரணத்தை தழுவச்செய்த பழ வகையை பார்க்கும்போதெல்லாம் தங்களுடைய செல்வங்களை பற்றிய சிந்தனையே ஏற்படும் என்பதால், அவதானமாக இருந்தால், அகால மரணங்களைத் தவிர்க்கலாம் என்பதே எமது அறிவுறுத்தல்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பாசத்துக்கு புவியீர்ப்பு சக்தியைவிட, அபாரமான திறன் உண்டு. ஆனால், சிலர் பாசத்தைக் காட்டியே காரியமாற்றி விடுகின்றார்கள். இதுவும் தவறான ஒன்றுதான்.

ஒருவரைச் சிந்திக்க விடாமல், பாசத்தைக் காட்டி, தங்கள் பக்கம் ஈர்ப்பதும் நல்ல செயல் அல்ல! அடங்காத பிள்ளைகளை அன்பு ஆட்கொண்டு விடுகின்றது. எனினும் சிலர், பிறரைத் தவறான விதத்தில், தங்கள் காரிய சித்திக்காக, போலித்தனமான கருணையைக் காட்டுவது முறையற்றது.

தவறுகளைத் திருத்தாமல், பிள்ளைகளை இஸ்டத்துக்கு வளர்க்கக்கூடாது. சில பெற்றோர் பிள்ளைகளின் தவறுகளை மறைக்கிறார்கள். பாசம் மூலம், பிள்ளைகளின் எதிர்காலத்தை வீணடித்தலாகாது.

எதிர்கால சிருஷ்டிகர்த்தாக்கள் தற்போது தவளும் குழந்தைகளே! அன்பையும் பண்பையும் ஊட்டும் பெற்றோர், கட்டுப்பாடுகளையும் விட்டுவிடக்கூடாது. நவநாகரிகமான உலகில், பிள்ளைகளின் குணவியல்பு மாறிவருகின்றன. முதியவர்களைக் கௌரவிக்கும் இயல்பு மாறிவிட்டது. பெற்றோர்களையே கண்டுகொள்ளாமல் இருக்கும் பிள்ளைகள், தங்களுக்கும் முதுமை வரும் என்பதை உணராமல் இருக்கிறார்கள். காலம் உண்மை சொல்லும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தவறுகளால் பாடம் கற்றுக் கொள்ளாத நாடு



எம்.எஸ்.எம்.ஐயூப்

தாம் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளை, அரசாங்கம் எவ்வாறு தீர்க்கப் போகின்றது என்பது, நாட்டில் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. அவ்வாறான ஏதாவது திட்டம், அரசாங்கத்திடம் இருப்பதாகவும் தெரியவில்லை. அவ்வாறு ஏதாவது இருந்தால், அது சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மட்டுமே. அதன் மீது தான் பொதுவாக சகலரும், நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வைத்திருக்கிறார்கள்.

ஆனால், கடந்த 20 ஆம் திகதி, இலங்கைக்கு வந்த அந்த நிதியத்தின் பிரதிநிதிகள் திரும்பிச் செல்லும் போது வெளியிட்ட அறிக்கையில், நம்பிக்கை தரும் தொனி எதுவும் பெரிதாக இல்லை. அந்த நிதியத்தின் உதவியைப் பெற்று, நாட்டின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதைப் பற்றி, அவர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டம் ஒன்றை, இலங்கை அரசாங்கம் இன்னமும் சமர்ப்பிக்கவில்லை போல் தான் தெரிகிறது.

அந்நிதியத்தின் உதவியில் அரசாங்கம், தற்போதைய கடன் சுமையை குறைத்துக் கொள்ள முயல்கிறதா அல்லது, அதற்கு அப்பால் சென்று பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, இந்தக் கடன் பொறியிலிருந்து முற்றாக மீள முயல்கிறதா என்பது தெளிவில்லை.

இலங்கை, இதற்கு முன்னரும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தும் உலக வங்கியிடம் இருந்தும் உதவிகளைப் பெற்றுள்ளது. ஆயினும், அதன் மூலம் கடன் பொறியிலிருந்து மீளவோ நாட்டை அபிவிருத்தி செய்யவோ, நாட்டின் தலைவர்களால் முடியவில்லை. இது பெரும்பாலும் அந்த நிதி நிறுவனங்களின் தவறல்ல. இந்நாட்டுத் தலைவர்கள், அவற்றை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதே உன்மையாகும். இன்று நாடு பெரும் அழிவை சந்தித்துள்ளது. இந்த நிலையில், நாட்டு மக்களும் அரச தலைவர்களும் கற்க வேண்டிய பிரதான பாடம் அதுவாகும்.

அதன் மூலம், இம்முறையாவது அந்நிறுவனங்களை முறையாகப் பாவித்து, முறையாகத் திட்டமிட்டு, உள்நாட்டு உற்பத்திகளைப் பெருக்கி, வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பைப் பலப்படுத்தி, எதிர்க்கால பொருளாதார சவால்களை எதிர்நோக்கும் வகையில், பொருளாதாரத்தை பலப்படுத்திக் கொள்ள தலைவர்கள் முயல வேண்டும்.

அதேவேளை, அதற்காக மக்கள் அவர்களை வற்புறுத்த வேண்டும். எனினும், தலைவர்களோ மக்களோ அந்தப் பாடத்தை தற்போதைய நெருக்கடியால் கற்றுக் கொண்டார்களா என்பது சந்தேகமே.

அவ்வாறானதொரு திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று, ஏற்கெனவே சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும், அரசாங்க தலைவர்களிடம் தெரிவித்துள்ளன. கடந்த வாரம், சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்ற செயலணி மட்டத்திலான கூட்டங்களின் போது, அந்நிதியத்தின் பிரதிநிதிகள் அவ்வாறானதொரு திட்டத்தை அரசாங்கத்திடம் எதிர்ப்பார்த்தார்கள்.

அரசாங்கம் அவ்வாறானதொரு திட்டத்தை முன்வைக்கும் வரை, உலக வங்கியும் இலங்கைக்கு புதிதாக நிதி உதவி வழங்குவதில்லை என, அவ்வங்கியும் கடந்த வாரம் அறிவித்தது.

இறக்குமதியை முதன்மையாகக் கொண்ட பொருளாதாரத்துக்குப் பதிலாக, உற்பத்திப் பொருளாதரத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்று, ஒவ்வொரு தேர்தலின் போதும் இலங்கையின் சகல கட்சிகளும் கூறி வருகின்றன. அதாவது, நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை எவ்வாறு அடைவது என்பதை, அவர்கள் அறிந்திருக்கிறார்கள். நாட்டில் தேசிய உற்பத்திகளையும் சேவைகளையும் வளர்ச்சியுறச் செய்தால், உள்நாட்டு தேவைகளை தேசிய ரீதியிலும் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

ஆனால், இதற்கு சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். அதற்கிடையில் தேர்தல்கள் வரும்.அந்தத் தேர்தல்களில் மக்களை ஏமாற்றுவதாக இருந்தால், அவ்வாறான நீண்ட கால திட்டங்களைப் பார்க்கிலும், பாரிய கட்டடங்கள், வீதிகளை காட்டி, அவற்றை அபிவிருத்தியாகக் காட்ட வேண்டும். இவற்றைத் தான், இலங்கையின் தலைவர்கள் அனேகமாகச் செய்தார்கள்.

ஒரு சிலர் மட்டும், சில பயனுள்ள வேலைகளை செய்தார்கள் என்பது உண்மை தான். ஆனால், பொதுவாக சகல தலைவர்களும் அடுத்த தலைமுறையினரைப் பற்றிச் சிந்திப்பதற்குப் பதிலாக, அடுத்த தேர்தலைப் பற்றியே சிந்தித்தார்கள்.

எனவே, அவர்கள் நாட்டில் இருந்த கடதாசி, உருக்கு, சீனி, ஒட்டுப்பலகை, டயர், புடவை, இரசாயனப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை விற்றுவிட்டார்கள். இன்றைய பொருளாதார நெருக்கடிகள் இதன் விளைவாகும். அந்தப் பாடத்தை, இன்றைய ஆளும் கட்சியினரோ, எதிர்க்கட்சியினரோ கற்கத் தயாரா என்பது கேள்விக்குறியாகும்.

இன்று, நாடு எதிர்நோக்கும் பிரதான நெருக்கடி மின்சாரம், எரிபொருள் பிரச்சினையாகும். அவ்விரண்டும் இலகுவாகப் பெறக் கூடிய நிலை இருந்தால், அலுவலகங்கள் இயங்கும்; தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகள் இயங்கும்; பாடசாலைகள், மருத்துவமனைகள் இயங்கும்; பொதுவாக, சாதாரணமாக நாடு இயங்கும்.

இரு துருவங்களை அண்டிய நாடுகளைப் போலன்றி, இலங்கையில் வருடம் முழுவதிலும் சூரிய ஒளியை பிரகாசமாகப் பெற முடிகிறது. ஆனால், சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் மிகச் சிறிதளவாகவே உற்பத்தி செய்யப்படுகிறது. காரணம், டீசல் மூலம் மின்உற்பத்தி செய்யும் சில தனியார் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களான சில பொறியியலாளர்களே, மின்சார சபையையும் வழிநடத்துபவர்களாக இருக்கிறார்கள்.

மின்சார சபை, தனது மின்உற்பத்தி நிலையங்களின் மின்சாரம் போதுமானதாக இல்லை என்று, இந்தத் தனியார் மின் உற்பத்தியாளர்களிடம் மின்சாரத்தை அடிக்கடி கொள்வனவு செய்கிறது. எனவே அவர்கள் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம், நீர், காற்று ஆகியவற்றின் மூலமான மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு இடமளிப்பதில்லை. புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதை, சிலவேளை வருடக் கணக்கில் இழுத்தடித்து தாமதப்படுத்துகிறார்கள். இதனை அண்மையில், எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவும் ஏற்றுக் கொண்டார்.

கடந்த மாதம் அவர்கள் ரந்தெனிகல, ரனடம்பே ஆகிய நீர்தேக்கங்களின் நீரை அநாவசியமாக வெளியேற்றி, அதற்குப் பதிலாக 52 கோடி ரூபாய்க்கு தனியார் மின்நிலையங்களிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்தார்கள். இப்போது அது சம்பந்தமான விசாரணை நடைபெறுகிறது. ஆனால், மூன்று வாரங்களாகியும், 'நீர்தேகக்கத்தை திறந்து விட யார் உத்தரவிட்டார்' என்பதை, அதிகாரிகள் கண்டுபிடிக்கவில்லை. இதற்கு முன்னர், மின்சார சபையில் இடம்பெற்ற இதுபோன்ற விசாரணைகளுக்கு நடந்த கதியை நினைக்கும் போது, இந்த விசாரணையின் முடிவையும் ஊகித்துக் கொள்ளலாம். இந்த நாடு, இவ்வளவு பாரிய பொருளாதார அழிவைச் சந்தித்தும், பாடம் படிக்கவில்லை என்பதையே இந்தச் சம்பவமும் காட்டுகிறது.

இப்போது எரிபொருள் பற்றாக்குறை, போக்குவரத்தை வெகுவாகப் பாதித்து, வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதற்கு முன்னர், வீதிகளில் கடும் வாகன நெரிசல் காரணமாக, போக்குவரத்து கடினமாக இருந்தது. இரண்டுக்கும் காரணம், மிகப் பெரும் எண்ணிக்கையில் நாட்டுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமையாகும். இந்தப் பிரச்சினையைப் பற்றிய புள்ளிவிவரங்களை கருத்தில் கொள்ளும் போது, ஆட்சியாளர்கள் இந்த நிலைமையைத் தடுத்திருக்கலாம் என்பது தெளிவாகிறது.

போக்குவரத்துக்கு ஒதுக்கப்படும் எரிபொருளில் 76 சதவீதம் பிரயாணிகள் போக்குவரத்துக்காகவே செலவாகிறது. அதிலும், 51 சதவீதம் கார்களுக்காகவும் 31 சதவீதம் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களுக்காகவும் 17 சதவீதம் பொதுப் போக்குவரத்துக்காகவும் உபயோகிக்கப்படுகிறது என, மொரட்டுவை பல்கலைகழகத்தின் பேராசிரியர் அமல் குமாரகே கூறுகிறார்.

பிரயாணிகளில் 50 சதவீதமானோர் 59,000 பஸ்களில் பயணம் செய்கிறார்கள். அதற்காக 17 சதவீத எரிபொருள் மட்டுமே உபயோகிக்கப்படுகிறது. பெரும்பாலும் ஒருவர், இருவர், மூவர் பயணிக்கும் ஒரு இலட்சத்துக்கு அதிகமான கார்களும் 11 இலட்சத்துக்கு அதிகமான ஓட்டோக்களும் 50 இலட்சம் மோட்டார் சைக்கிள்களும் மிகுதி 50 சதவீத பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இவை வீதிகளில் நெரிசலை ஏற்படுத்தி, பயணிகள் போக்குவரத்துக்கான எரிபொருளில் 82 சதவீதத்தையும் உட்கொள்கின்றன.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு இது பிரதான காரணமாகும். வசதியுள்ளவர்களும் பயணம் செய்யும் வகையில், பொதுப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதே இதற்குத் தீர்வாகும் என்பதை, நிபுணர்கள் நீண்ட காலமாக கூறி வருகிறார்கள். ஆனால், இவ்வளவு பாரிய நெருக்கடியை சந்தித்தும் உரிய அதிகாரிகளின் நிகழ்ச்சி நிரலில், இந்த விடயம் இடம்பிடித்துக் கொள்ளவில்லை. அதாவது அவர்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

இன்றைய நெருக்கடியிலாவது பாடங்களை கற்றுக் கொள்ளாதவர்கள், ஒருபோதும் கற்றுக் கொள்ளப்போவதில்லை. அதற்கான மாற்றம் மேலிருந்து தான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### அதிபரை நியமியுங்கள்

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தில் முக்கிய பாடசாலையாக விளங்கும் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதிபர் நியமிக்கப்படாமல் இருப்பதாக பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தில் 1ஏபி பாடசாலையான இப்பாடசாலையில் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பாடசாலையில் பணியாற்றிய அதிபர், 2020 புரட்டாதி மாதத்தில் பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து, இதுவரை நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை. பாடசாலைக்கு அதிபரை நியமியுங்கள் என பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையிலும், இதுவரை அதிபர் நியமிக்கப்படவில்லை.

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கான அதிபர் நியமிக்கப்பட்ட போதும், யாழ்ப்பாணத்தில் இருந்து நியமிக்கப்பட்ட அதிபர், பாடசாலைக்குச் சென்று பொறுப்புகளை ஏற்கவில்லை.

அதிபர் இல்லாது இயங்கிய ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், யோகபுரம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு அதிபர் நியமிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக பெற்றோர்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை

### கைதான மீனவர் விவகாரம்:

# இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்

இலங்கை படையினர் தொடர்ந்து அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) தலைவர் அன்புமணி ராமதாஸ், கைதான மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவையென வலியுறுத்தியுள்ளார். அத்துடன் மேற்படி அத்துமீறல் விவகாரத்துக்கு இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும் என்றார்.

“வங்கக்கடலில் கோடியக்கரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மாவட்ட மீனவர்கள் 5 பேரை இலங்கை கடற்படையினர் அத்துமீறி கைது செய்துள்ளனர். அவர்கள் இலங்கை எல்லைக்குள் நுழைந்ததாகக் கூறி, காங்கேசன்துறை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

காரைக்காலில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி விலகும் முன்பே அடுத்த கைது படலமும் அத்துமீறலும் நடந்திருக்கிறது. தமிழகத்தின் எதிர்ப்பும் கண்டனமும் இலங்கை அரசை அசைத்துக்கூட பார்க்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.



தமிழக மீனவர்கள் மீதான சிங்களக் கடற்படையினரின் தொடர் அத்துமீறலை, மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது. மீனவர்களை கைது செய்ததற்காக இலங்கை அரசுக்கு மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கவேண்டும்; இனி கைது கூடாது என்று இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்” என்றும் தெரிவித்துள்ளார்.

இமாச்சல்

### மலையில் இருந்து விழுந்த பஸ்

# 16 பேர் பரிதாபமாக மரணம்

## உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ரூ. 2 இலட்சம்




இமாச்சல் பிரதேசத்தில் மலையிலிருந்து பஸ்ஸொன்று விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.2 லட்சம், காயம் அடைந்தவர்களுக்கு ரூ.50,000 நிவாரண தொகை பிரதமர் நிதியில் இருந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் மலைப் பகுதியில் நிகழ்ந்த பஸ் விபத்தில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மலைப் பாங்கான பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த பஸ், நேற்று (05) காலை 8.30 மணியளவில் பள்ளத்தாக்கில் தவறி விழுந்தது.

இந்தக் கோர விபத்தில் சிக்கி இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர். பஸ்ஸில் 40க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாக கூறப்படும் நிலையில், இதில் பெரும்பாலானோர் பாடசாலை மாணவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் பஸ் விபத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி, மாநில முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். பிரதமர் மோடி தனது ட்விட்டர் பதிவில், ‘இமாச்சல் மாநிலம் குல்லுவில் நடைபெற்ற பஸ் விபத்து கவலையைத் தருகிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கல். மேலும் காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய விரும்புகிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவியை விரைந்து மேற்கொள்ளவும்’ என உள்ளூர் நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிவகங்கை

# பக்ரீத் பண்டிகைக்கு விசேட ஏற்பாடுகள்

இப்ராகீம் நபிகள் வாழ்வில் செய்த தியாகத்தை நினைவுகூரும் விதமாக உலக முஸ்லிம்கள் துல்ஹஜ் மாதம் 10 ஆம் நாள் பக்ரீத் பண்டிகையாக, தியாகத் திருநாளாக வருடந்தோறும் கொண்டாடி வருகின்றனர். அதன்படி ஜூலை 10 ஆம் திகதி பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

பக்ரீத் பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், தற்போது சந்தைகளில் ஆடுகளின் விற்பனை களைகட்டியுள்ளது.

நேற்று (05) அதிகாலை முதல் நடந்த சந்தையில் ஆடுக்கிடாய்கள் 10 ஆயிரம் முதல் 27 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டன. சுமார் 1 கோடி ரூபாய்க்கும் மேல் வியாபாரம் நடந்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளா

# புது வீட்டுக்காக திருடியவர்கள் சிக்கினர்



கேரளாவில் கடையிலிருந்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பு மிக்க வீட்டு உபகரண பொருட்களை திருடிய திருடர்கள், பணப்பெட்டியில் இருந்த 3,000 ரூபாயையும் திருடிச் சென்றுள்ளனர்.

சி.சி.டி.வி காட்சிகளை பொலிஸார் ஆய்வு செய்ததன் பின்பு இவர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் வாடகை வீட்டுக்குத் தேவையான பொருட்களை, லிஸ்ட் போட்டு திருடியுள்ளனர். சோப்பு, சீப்பு கண்ணாடி, உள்ளிட்ட பொருட்களை மூவராக சேர்ந்து திருடி ஓட்டோவில் கடத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தியா

# ‘காளி’ போஸ்டர் சர்ச்சை

## இந்திய உயர்குழு ஆணையம் நடவடிக்கை

கையில் சிகரெட்டுடன் இருக்கும் காளி போஸ்டருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்து மத உணர்வுகளை புண்படுத்தியதாகவும் கூறி, ஆவணப்பட இயக்குநர் லீனா மணிமேகலை மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காளி வேடமணிந்த ஒரு பெண்ணின் கையில் சிகரெட்டும், LGBTQ சமூகத்தினரின் கொடியும் இருந்தது. இன்னபிற கைகளில் தண்டாயுதம், சூலம் இருந்தன. இந்தப் புகைப்படம், இந்து மத உணர்வாளர்களைப் புண்படுத்தியதாக லீனா மணிமேகலையை கைது செய்ய வேண்டும் என டிவிட்டரில் ட்ரெண்டிங் செய்யப்பட்டது.

லீனா மணிமேகலை அதிகமாக ஆவணப் படங்களையும் சில திரைப்படங்களையும் எடுத்துள்ளார். சமீபத்தில் ‘மாடத்தி’ படத்தினையும் எடுத்து வெளியிட்டு இருந்தார். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர், தற்போது கனடாவின் டொரண்டோ பகுதியில் வசித்து வருகிறார்.

இந்த ஆவணப்படத்தின் சர்ச்சை குறித்து லீனா மணிமேகலை கூறும்போது, “ஒரு மாலைப்பொழுது, டோரோண்டோ மாநகரத்தில காளி தோன்றி வீதிகளில் உலா வரும்போது நடக்கிற சம்பவங்கள் தான் படம். படத்தைப் பார்த்தால் என்னை கைது செய்யும் எண்ணத்தை விட்டு லவ் யூ சொல்ல ஆரம்பித்து விடுவீர்கள்” என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ‘காளி’ திரைப்படம் திரையிடல் சம்மந்தப்பட்ட அனைத்தையும் திரும்பப் பெறுமாறு அந்த படத்தை திரையிட்ட நிகழ்ச்சி குழுவினருக்கு ஒட்டாவா இந்திய உயர் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.




இதையடுத்து, டொராண்டோவில் உள்ள இந்திய துணைத் தூதரகம் இது குறித்து நிகழ்வின் அமைப்பாளர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளது. மேலும், பல இந்து அமைப்புகள் கனடா அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளது.

## ‘எனக்கு உடன்பாடில்லை’



மத உணர்வுகளைப் புண்படுத்துவதில் எனக்கு உடன்பாடில்லை என்று ‘காளி’ போஸ்டர் சர்ச்சை குறித்து நடிகையும் திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.யுமான நுஷ்ரத் ஜஹான் கூறியுள்ளார்.

இந்தச் சூழலில் ‘இந்தியா டுடே’ பத்திரிகை நடத்தும் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நுஷ்ரத் ஜஹானிடம் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. ஏனெனில், 2020 செப்டெம்பரில், துர்கா போல் வேடமணிந்து ஃபோட்டோ ஷூட் நடத்தியதற்காக நுஷ்ரத் ஜஹானுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. அதனால் அவரிடம் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.




# அமைச்சரவை தீர்மானங்கள் சில..

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், செவ்வாய்க்கிழமை (05) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில் சில...

### 01) உபகுழுவை மீளமைத்தல்

வாழ்க்கைச் செலவை நிலையாகப் பேணுவதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான தீர்வுகளை அமைச்சரவைக்குப் பரிந்துரைப்பதற்காக, வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை மீளமைப்பதற்காக அமைச்சரவையில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, பந்துல குணவர்தன, மஹிந்த அமரவீர, ரமேஷ் பத்திரண, காஞ்சன விஜேசேகர, நளீன் பெர்ணான்டோ ஆகியோர் அடங்குகின்றனர்.

### 02) பற்றாக்குறையைத் தவிர்க்க மாற்றுப் படிமுறைகள்

சீமெந்து, வோட்டர் ஜெல், எமல்ஷன் உற்பத்திகள் மற்றும் கருங்கல் உடைத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்து இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தலின் ஏகபோக உரிமை மட்டுப்படுத்தப்பட்ட அரச வியாபார (பொதுக்) கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணிப் பற்றாக்குறை மற்றும் குறித்த வெடிமருந்தின் நீண்டகால விநியோகத்தரான அரச வியாபாரக் (பொது) கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிப்பதற்கு இயலாமல் போனமையால் தற்போது நாட்டில் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அதனால், குறித்த வெடிமருந்தைப் பயன்படுத்தப்படும் தொழிற்துறை நடவடிக்கைகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைக்குத் தீர்வாக குறுகிய காலத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டின் கீழ் துரிதமாக நாட்டுக்கு அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம்

### 03.(Letter of Intent) கையொப்பமிடல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாதுகாப்பு அமைச்சுக்கும் இந்தோனேசிய குடியரசின் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்புப் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதுதொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்காக இரண்டு நாடுகளுக்கிடையிலான உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு இந்தோனேசிய அரசால் முன்மொழியப்பட்டுள்ளதுடன், தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி உத்தேச ஒப்புதல் ஆவணத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் கையொப்பமிடுவதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 04. குற்றவாளியை மீள ஒப்படைத்தல் ஒப்பந்தம்

குற்றவாளிகளை மீள ஒப்படைத்தலில் நீதிமன்ற ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் நோக்கத்தில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையில் 2014 ஆம் ஆண்டு குற்றவாளிகளை மீள ஒப்படைத்தல் ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இரண்டு நாடுகளின் நீதிமுறைமைக்குப் பொருத்தமான வகையில் மீண்டும் திருத்தங்களை மேற்கொண்டு, குறித்த மீள் ஒப்படைத்தல் ஒப்பந்தத்தை ஏற்று அங்கிகரிப்பதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 05. ஜப்பான் உதவி நிகழ்ச்சித்திட்டம்

அரச துறையின் நிறைவேற்று வகுதியிலான அலுவலர்களுக்கு ஜப்பானில் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின் படிப்புப் பாடநெறியைப் பயில்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக ஜப்பான் அரசாங்கம் மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசிலுக்கான உதவி நிகழ்ச்சித்திட்டம் 2010 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது.

குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இதுவரை 195 பட்டப்பின் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் மற்றும் 10 கலாநிதிப் பட்டத்திற்கான வாய்ப்புக்களும் கிடைத்துள்ளன. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் 282 மில்லியன் ஜப்பான் யென் (கிட்டத்தட்ட 761 மில்லியன் ரூபாய்கள்) வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பரிமாற்று ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு அங்கிகாரம்.

### 06.அலுவலகமொன்றை தாபித்தல்

ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபை வதிவிடமற்ற பணிப்பாளர்களைக் கொண்டமைந்துள்ளதுடன், குறித்த பணிப்பாளர்கள் ஓர் அரசோ அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளுடன் கூடிய 12 பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இவ்வங்கியின் ஆரம்பகால அங்கத்தவரான இலங்கையானது, வங்கியின் 11 ஆவது பிரிவைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றது. இந்தோனேசியா குறித்த பிரிவின் பிரதான பங்குதாரராவதுடன், இலங்கை, கம்போடியா, மியான்மார், லாவோசியா, கிழக்குத் தீமோர் ஏனைய அங்கத்துவ நாடுகளாகும்.

அவ் அரசுகளுக்கிடையில் 2016 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய குறித்த பிரிவுக்குரிய பணிப்பாளர் பதவி, மாற்றுப் பணிப்பாளர் பதவி என்பன சுழற்சி முறையில் பரிமாற்றம் செய்யப்படுகின்றது.

அதற்கமைய, 2022-2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவுக்கான தலைமைத்துவம் மற்றும் பணிப்பாளர் பதவியை வகிப்பதற்கு இலங்கைக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதுடன், அதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான யோசனைக்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 07. சர்வதேச தினம்

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைப்பின் ஆளுகை சபையால் அதன் 224 ஆவது கூட்டத்தொடரின் 5 ஆவது கூட்டத்தின் போது ஒவ்வோர் ஆண்டும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி விமான விபத்துக்களுக்குள்ளாகிய நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களை நினைவு கூரும் சர்வதேச தினமாக பெயரிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, அத்தீர்மானத்திற்கு இணங்கியொழுகி இலங்கையிலும் ஒவ்வோர் ஆண்டும் பெப்ரவரி 20 ஆம் திகதி விமான விபத்துக்களுக்குள்ளாகிய நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களை நினைவு கூரும் சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 09. விவசாயப் பயிர்ச் செய்கை வேலைத்திட்டம்

சிறைச்சாலைக் கைதிகளை சிறைக்கூடத்தில் தடுத்து வைத்திருக்கும் முறைக்குப் பதிலாக அவர்களை நாட்டின் மனிதவளமாக கருதுவதன் மூலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் உழைப்பை நாட்டின் விவசாய அபிவிருத்தி ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் ‘சிறைக்கூடத்திலிருந்து செழிப்பான பயிர்நிலத்திற்கு’ எனும் பெயரிலான விவசாயப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டமொன்றுக்கு அங்கிகாரம்.

இந்தியாவுக்கெதிரான 5ஆவது டெஸ்டில்

# வெற்றியை நோக்கி இங்கிலாந்து

இந்தியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், பேர்மிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஐந்தாவது டெஸ்டின் நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் வெற்றியை நோக்கி இங்கிலாந்து பயணிக்கிறது.

நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இந்தியா குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. செட்டேஸ்வர் புஜாரா 66, றிஷப் பண்ட் 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 4, மத்தியூ பொட்ஸ் 2, ஸ்டுவேர்ட் ப்ரோட் 2, ஜேக் லீச் 1, ஜேம்ஸ் அன்டர்சன் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். பதிலுக்கு 378 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, அலெக்ஸ் லீஸின் 56, ஸக் க்றொலியின் 46 ஓட்டங்கள் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றதுடன், பின்னர் இவர்கள் இருவரையும், ஒலி போப்பையும் இழந்தபோதும் ஜோ றூட், ஜொனி பெயார்ஸ்டோவின் இணைப்பாட்டத்தில் 3 விக்கெட்டுகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றவாறு நான்காம் நாள் முடிவில் காணப்படுகின்றது. தற்போது களத்தில் றூட் 76 ஓட்டங்களுடனும், பெயார்ஸ்டோ 72 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். அணித்தலைவர் ஜஸ்பிரிட் பும்ரா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 416/10 (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 146, இரவீந்திர ஜடேஜா 104, ஜஸ்பிரிட் பும்ரா ஆ.இ 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 5/60, மத்தியூ பொட்ஸ் 2/105, ஜோ றூட் 1/23, ஸ்டுவேர்ட் ப்ரோட் 1/89, பென் ஸ்டோக்ஸ் 1/47)

இங்கிலாந்து: 284/10 (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 106, சாம் பில்லிங்ஸ் 36, ஜோ றூட் 31, பென் ஸ்டோக்ஸ் 25, மத்தியூ பொட்ஸ் 19 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/66, ஜஸ்பிரிட் பும்ரா 3/68, மொஹமட் ஷமி 2/78, ஷர்துல் தாக்கூர் 1/48)

இந்தியா: 245/10 (துடுப்பாட்டம்: செட்டேஸ்வர் புஜாரா 66, றிஷப் பண்ட் 57, இரவீந்திர ஜடேஜா 23, விராட் கோலி 20, ஷ்ரேயாஸ் ஐயர் 19 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 4/33, மத்தியூ பொட்ஸ் 2/50, ஸ்டுவேர்ட் ப்ரோட் 2/58, ஜேக் லீச் 1/28, ஜேம்ஸ் அன்டர்சன் 1/46)

இங்கிலாந்து: 259/3 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 76, ஜொனி பெயார்ஸ்டோ ஆ.இ 72, அலெக்ஸ் லீஸ் 56, ஸக் க்றொலி 46 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 2/53)

அக்கரைப்பற்று மாநகர சபையால்

## உள்ளக கால்பந்தாட்ட அரங்கு திறந்து வைப்பு

நூருல் ஹுதா உமர், எம்.எல்.எஸ்.டீன்

பிராந்திய இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் எண்ணக்கருவில் அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதி ஒதுக்கீட்டில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உள்ளக உதைப்பந்து அரங்கை (Futsal) பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைத்து கையளிக்கும் நிகழ்வானது, அக்கரைப்பற்று மாநகர சபைத் தலைவர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.



பிராந்திய விளையாட்டு வீரர்களின் ஆட்டத் திறனை ஊக்குவித்து, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த வீரர்களாய் பட்டை தீட்டுவதுடன் ஆரோக்கியமும், ஒழுக்க விழுமியங்களும் மிகுந்த இளைஞர் சமுதாயத்தை கட்டியெழுப்புவதும் இவ்வுள்ளக மைதானம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்கள் ஆகும் என அதாஉல்லா அகமட் ஸகி இந்நிகழ்வின் போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

## திருத்துவம், இசிப்பத்தன கல்லூரிகள் வென்றன

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், நிட்டவல றக்பி அரங்கில் அண்மையில் நடைபெற்ற தமது வைரிகளான கண்டி சென். அந்தனிஸ் கல்லூரியை 25-18 என்ற புள்ளிகள் கணக்கில் கண்டி திருத்துவக் கல்லூரி வென்றிருந்தது. இந்நிலையில், சுகததாஸ அரங்கில் நடைபெற்ற வெஸ்லிக் கல்லூரியுடனான போட்டியில் 10-0 என்ற புள்ளிகள் கணக்கில் இசிப்பத்தன கல்லூரி வென்றிருந்தது.

## குண்டெறிதல் போட்டியில் வெள்ளி வென்ற குளோரியன்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

தேசிய பராஒலிம்பிக் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளில் குண்டெறிதல் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வன் குளோரியன் ஹேமேந்திரா தேசிய ரீதியில் வெள்ளிப்பதக்கத்தை வென்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இப்போட்டிகள் ஜூன் 28ஆம், 29ஆம் திகதிகளில் இடம்பெற்றன.

சிறு வயது முதல் விளையாட்டில் தனது திறமையை வெளிப்படுத்தி வரும் 15 வயதான செல்வன் குளோரியன் ஹேமேந்திரா நீச்சல், கூடைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளிலும் திறமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.








## இலங்கை டெஸ்ட் குழாமில் வெல்லலாகே, தீக்‌ஷன

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டுக்காக டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்ளாத மகேஷ் தீக்‌ஷன, டுனித் வெல்லலாகே, புதுமுகவீரர் லக்‌ஷித மனசிங்கேயை இலங்கை அழைத்துள்ளது. இலங்கைக் குழாமிலிருந்து லசித் எம்புல்தெனிய நீக்கப்பட்டதுடன், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பிரவீன் ஜெயவிக்கிரம இப்போட்டியில் பங்கேற்க முடியாத நிலையிலேயே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அஞ்சலோ மத்தியூஸ் மீண்டும் குழாமில் இணைந்துள்ளார்.



பாகிஸ்தான்

# தொடர்பாடலுக்கு தடை?

பாகிஸ்தான் அரசானது அண்மைக்காலமாக கடுமையான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றது. குறிப்பாக அந்நாட்டில் நிலவி வரும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மின் உற்பத்தி கணிசமான அளவு குறைந்துள்ளது. இதன் காரணமாக தொலைபேசி மற்றும் இணைய சேவைகளை நிறுத்த நேரிடலாம் எனப் பாகிஸ்தான் தேசிய தகவல் தொழில்நுட்ப வாரியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப், “ஜூலை மாதத்தில் நாட்டில் மின்வெட்டு அதிகரிக்கலாம்” என எச்சரித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இவ் அறிவிப்பானது அந்நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆபிரிக்கா

பயங்கரவாதிகளின் திடீர் தாக்குதலில்

## 22 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான பர்கினோ பசோவில் அல்கொய்தா, ஐ.எஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகள் அதிகளவு ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

குறிப்பாக இப்பயங்கரவாத அமைப்புகள் அவ்வப்போது பொதுமக்கள், பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகின்றன.

அதேசமயம் பயங்கரவாதிகளுக்கு எதிராக, பாதுகாப்பு படையினருக்கு உதவியாக அரசு ஆதரவு குழுக்களும் ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் பர்கினோ பாசோவின் கோஷி மாகாணத்தின் போர்ஸோ நகரிலுள்ள கிராமத்தில் பொதுமக்கள் மீது அண்மையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இத்தாக்குதலில் 22 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தத் தாக்குதலில் அல்கொய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாத குழுக்கள் ஈடுபட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அமெரிக்கா

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் துப்பாக்கி சூடு:


## 6 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் சுதந்திர தினமானது ஆண்டுதோறும் ஜூன் நான்காம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி 246 ஆவது சுதந்திர தினம் நேற்று முன்தினம் (04) கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு அந்நாட்டில் பல்வேறு மாகாணங்களில் சுதந்திர தின அணிவகுப்புகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிலையில் இல்லினாய்ஸ் மாகாணத்தின் சிகாகோ நகரின் புறநகரப் பகுதியில் உள்ள ஹைலண்ட் பூங்காவில் சுதந்திர தின அணிவகுப்பொன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இதன் போது குறித்த அணிவகுப்பில் கலந்து கொண்ட மர்ம நபர் ஒருவர் திடீரென மக்களை நோக்கி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 24 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா



வீடொன்றில் இருந்து அழுகிய நிலையில்

## 31 சடலங்கள் மீட்பு

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் அமைந்துள்ள இறுதிச் சடங்கு இல்லம் ஒன்றில், அழுகிய நிலையில் 31 சடலங்கள் அண்மையில் மீட்கப்பட்டன.

இந்நிலையில் மீட்கப்பட்ட சடலங்களை அடையாளம் காணும் பணிக்காக அருகாமையில் உடற்கூறு ஆய்வாளர் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், இது குறித்து இறுதிச்சடங்கு இல்லத்தில் உரிமையாளரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் மீட்கப்பட்ட சடலங்களில் கடந்த மார்ச் மாதத்தில் இருந்தே, குறித்த இறுதிச் சடங்கு இல்லத்தில் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. அது மட்டுமில்லாமல் 16 பேர்களின் சடலங்கள் எரியூட்டப்பட்ட நிலையில் இருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமான் நிக்கோபார்

## அடுத்தடுத்து 20 முறை நிலநடுக்கம்

### அச்சத்தில் மக்கள்

வங்கக் கடலில் அமைந்துள்ள அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் நேற்று முன்தினம் முதல் அடுத்தடுத்து 20 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும், இந் நிலநடுக்கத்தால் மக்கள் சாலையிலேயே தஞ்சம் அடைந்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அங்கு பேரிடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு சுனாமி ஏற்படும் அபாயமும் இருப்பதாக கூறப்பட்டுள்ளதால் மீனவர்களும் கரையோரம் வசிக்கும் பொது மக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



பிரித்தானியா



## செல்வந்தர்களை குறிவைக்கும் பிரித்தானியா

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 4 மாதங்களாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன. குறிப்பாக தங்கள் நாட்டில் தங்கியுள்ள ரஷ்யாவைச் சேர்ந்த செல்வந்தர்களின் சொத்துகளையும் பிரித்தானியா அண்மையில் முடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவ்வாறு முடக்கப்பட்ட சொத்துகளை உக்ரேனுக்கு அளிப்பது குறித்து பிரித்தானியா பரிசீலனை செய்து வருவதாக கூறப்பட்டிருக்கிறது.

கரகல்பக்ஸ்தான்

அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்:

## 18 பேர் உயிரிழப்பு

தன்னாட்சி அதிகாரம் கொண்ட கரகல்பக்ஸ்தானில் சுமார் 20 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் அங்கு நடைபெற்று வரும் தன்னாட்சி அதிகாரத்தை இரத்து செய்வதற்காக அந்நாட்டு ஜனாதிபதி ஷ்வ்கத் மிர்சியோயேவ் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு முடிவு செய்துள்ளார்.

இதற்கு கரகல்பக்ஸ்தான் மக்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக கடந்த முதலாம் திகதி இத் தீர்மானத்தை எதிர்த்து பொதுமக்கள் பல இடங்களில் போராட்டங்களை நடத்தினர். இந்நிலையில், இப் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி ஷவ்கத் மிர்சியோயேவ், இராணுவ வீரர்களை களத்தில் இறக்கினார் எனவும் இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் வன்முறையில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் இவ் வன்முறையில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 500 க்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 06 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.